464

M. 1803. Vol. I.—No. 5.

17 JAN 1924

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

SARMA BROS MADRAS

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளி சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS

நயமான கம்பளி, நல்ல குளிரில் போர்த்திக் கொள்ள உதவும். கலர் கிரே. கருப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகல.
ரூ. 4½, 5.

கம்பளி ஆஸனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½,
உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக் கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு அக.	ரூ. 2	10 முழம்	40	இஞ்சு	அக.	ரூ.	7
6 ,,	24	,,	,, 2½	16 ,,	40	,,		,,	12
7 ,,	29	,,	,, 3	18 ,,	40	,,		,,	14
8 ,,	40	,,	,, 5½						

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,
காசி.

THE HON. DEWAN BAHADUR

T. N. SIVAGNANAM PILLAI,

Minister for Development, Madras.

உயர்திரு. திவான் பகதூர்

திரு. நெ. சிவஞானம் பிள்ளை,

சென்னை அரசாங்க அபிவிர்த்தி மந்திரி.

17 JAN 1924

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. | ருத்ரோத்காரி௵ மார்கழிமீ 1923 டிசம்பர் | இதழ் ரு

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	199
2.	திருவிளக்கு	201
3.	ஸத்யம்	207
4.	குழந்தைப் பாட்டு	211
5.	பாரதமகள் பாதச்சிலம்பு	212
6.	ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ...	214
7.	குணவதி	217
8.	ஆரோக்கிய லக்ஷ்மியின் ஆலயம் ...	223
9.	பழங்களே சிறந்த ஆகாரம் ...	227
10.	உழைப்பும் ஓய்வும்	230
11.	வைத்தியக் குறிப்புகள்	237
12.	மனோன்மணீய வசனம்	241
13.	உலகப் போக்கு	243
14.	விவேக பட்சிகள்	248

சித்திரப் படங்கள்.

உயர்திரு. டி. என். சிவஞானம் பிள்ளை

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)	... ...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 15. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

நமது புதிய பிரசுரங்கள்.

		ரூ.	அ.	ப.
பங்கஜம் அல்லது மோசம் போனேன்	...	0	2	0
குயில் மொழி ..	...	0	2	0
மனோன்மணீயம் ...	...	2	0	0
பரிமளா ...	...	1	0	0
காங்கிரஸ் யாத்திரை (அச்சில்)	...	0	3	0

தபால் ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

கே. எஸ். முத்தையா & கோ., சில்க் அவுஸ், மதராஸ்.

குஞ்சம் கட்டின பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு x 40 1 க்கு ரூ. 12, 14, 16, 18.

ஓம்

லக்ஷ்மி துதி

நான்மறை யீற்றினில், பாம்பின்
தலையில் நடித்தருளும்
கான்மலர்க் கார்முகில் அன்னை
நாடிக் கசிபவர்க்கு
மான் மழுச் செங்கைச் சிவனாதியர்
மெச்சும் மாண்பருளும்
தேன்மலர்ப் பீடம் பிராட்டியலே
பல செல்வமுமே.

ஆவணக் காப்பக நூலகம்
10333
சென்னை-600 008

ஆறு துணை.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

கணபதி.

கணபதி ராயன—அவ னிரு
காலைப் பிடித் திடுவோம்
குண முயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந் திடவே—(ஓம் சக்தி) 1

பரா சக்தி.

சொல்லுங் கடங்கா வே—பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம்
வல்லமை தந்திடு வாள்—பரா சக்தி
வாழி யென்றே துதிப்போம்—(ஓம் சக்தி) 2

வடிவேலன்.

வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ!—பகையே!
துள்ளி வருகுது வேல்—(ஓம் சக்தி) 3

ஸரஸ்வதி.

தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே-கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய் திடு வோம்—(ஓம் சக்தி) 4

கண்ணன்.

பாம்புத் தலை மேலே—நடஞ் செய்யும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்—(ஓம் சக்தி) 5

லக்ஷ்மி.

செல்வத் திரு மகளைத்—திடங்கொண்டு
சிந்தனை செய்திடு வோம்
செல்வமெல்லாந் தருவாள்-நம தொளி
திக் கனைத்தும் பரவும்—(ஓம் சக்தி) 6

—பாரதி.

17 JAN 1924

திருவிளக்கு

ஜோதியே, சுடரே, சுட ரொளி விளக்கே

என்ற நமது ஆன்றோர் எந்த விளக்கைக் கருதினரோ அந்த விளக்கைக் கருதி நாமும் நல் வாழ்வு பெறுவோம்.

திரு அனைத்திற்கும் தலைவியான லக்ஷ்மி பல ரூபங்களில் திகழ்கின்றாள். குணத்திலும் வடிவத்திலும் சிறந்த மகளிரிடம் அவள் கிரக லக்ஷ்மியாக விளங்குகின்றாள். தாய்போல நம்மை வளர்க்கும் கோ மாதா—பசுத் தாயிடமும் அவள் அவ்வாறே விளங்குகின்றாள். நாட்டிலே மீண்டும் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட வேண்டுமென்றால் நம் நமது தாய்மார்களை, சகோதரிகளை, பெண்களைத் தெய்வங்களாக, லக்ஷ்மிகளாகக் கருதிப் போற்ற வேண்டும். வீடுதோறும் கிரக லக்ஷ்மியாக ஒரு பசு வளர்ப்பதைப் பெரிய தோர் கடமையாகக் கொள்ள வேண்டும். பூமியும் ஒரு லக்ஷ்மி. ஸ்ரீனிவாசனுக்கு சீதேவியுடன் பூதேவியும் ஒரு மனைவி. ஆனால், இந்த நாட்டிலே பூதேவியை அறிவாளிகள்—படித்தவர்கள் அநேகமாய் மறந்து விட்டார்கள். 'பூமி திருத்தி யுண்' என்ற தமிழ்ப் பெருந் தாயின் வாக்கைப் பின்பற்றி இந்த நாட்டிலே படித்தவர்கள்—அறிவாளிகள் பூதேவியைத் தொழுது, விவசாயத்தில் என்று சிரத்தை செலுத்துகின்றார்களோ அன்று நமது நாட்டு வறுமை நீங்கும். பெருமை விளங்கும்.

திரு விளக்கு ஒரு லக்ஷ்மி. "திரு விளக்கு நாச்சியார்" என்று சொல்லும் வழக்கம் இன்னும் தென்னாட்டில் நிலவுகிறது. ஆயினும் காலையில் எழுதல், மாலையில் திருவிளக் கேற்றித் தொழுதல் போன்ற சிறந்த வழக்கங்கள் நாட்டில் குறைந்து மறைந்து வருகின்றன. ஜோதி ரூபமான தெய்வத்தை நாம் திருவிளக்கிலே தொழுகின்றோம்,

ஆனால் நவீன நாகரிகம் தோன்றிய பின்னர் திருவிளக்கிலே தெய்வம் திகழ்வதை நாம் மறந்து விட்டோம்.

தினந்தோறும் மாலையிலே விளக்கை விளக்கி, நெய் அல்லது எண்ணெய் விட்டுப் புதிய திரியிட்டுத் தீபம் ஏற்றிக் குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை யிட்டுத் திருவிளக்கு நாச்சியாரைத் தொழும் சிறந்த வழக்கத்தை தமிழ்ப் பெண்கள் மறந்தும் துறந்தும் வருகின்றார்கள். லோக மெங்கும் கலி சூழ்ந்ததன் ஒரு பயனாக நாடெங்கும் மண்ணெண்ணெய் விளக்குகள் ஏற்பட்டமையே நமது திருவிளக்கைத் தொழும் பழைமையான வழக்கம் தற்காலம் மறைந்து வருவதற்கு ஒரு காரண மாகும். பொன்னாலும், வெள்ளியாலும், வெண்கலத்தாலும், பித்தளையாலும் செய்த நமது திருவிளக்குகள், மணி விளக்குகள், கிளை விளக்குகள், தூக்கு விளக்குகள், தூண்டா விளக்குகள், ஜோதி விளக்குகள் அரிய கலைத்திறன் பொருந்தியவை. நெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் முதலிய சிறந்த எண்ணெய்கள் விட்டு எரிக்கும் விளக்கொளி சத்துவ ஒளியாகும். அந்த ஒளி கண்ணுக்குக் குளிர்ச்சியும் கருத்துக்கு இன்பமும் அளிப்பது. வேறு எண்ணிறந்த நலங்களை அளிப்பது.

ஆனால் தற்காலத்தில் பரவிவரும் மண்ணெண்ணெய் விளக்கோ பேய்விளக் கெனத் தகும். சீதேவி திகழும் வீட்டில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றிவைத்து விட்டால் போதும், உடனே மூதேவி வந்து விடுவாள். தகரத்திலோ ஜெர்மன் ஸில்வரிலோ செய்த விளக்கில் எரியும் மண்ணெண்ணெய் விளக்கைப் பார்த்தவுடன் எவருக்கேனும் தெய்வ சிந்தனை உண்டாகின்றதா? அதற்குப் பூ மாலையும் பொட்டும் இடலாமா? மண்ணெண்ணெய் விளக்கு எரியும் வீட்டில் பேய்கள் குடி புகுமென்று முன்னோர்கள் கூறி யிருக்கிறார்கள். ஸ்தூல உடம்பின்றி, சூக்ஷ்ம உடம்பில் உலவும் பேய்களை நாம் சூக்ஷ்ம விழி, ஞானக்கண், மூன்றாவது நேத்ரம் பெற்றா லன்றிக் காண முடியாது. ஆனால், நோய்களைப் பேயின் ஓர் அம்சமென்று கருதினால், மண்ணெண்ணெய் விளக்கினால் பேய்கள் குடி புகுகின்றன வென்று நிச்சயமாகக் கூறலாம்.

மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சம் கண்ணுக்கு உஷ்ணம் விளைப்பது. நமது திருவிளக்கின் அருகில் இருந்தும், மண்ணெண்ணெய் விளக்கின் அருகே யிருந்தும் ஓர் அரை நாளிகைப் பொழுது கருத்துடன் படித்துப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். மண்ணெண்ணெய் விளக்கின் ஒளி கண்ணைக் கெடுப்பதுடன், படிப்பதற்கு இன்ப மின்றிக் கருத்திலும் வெறுப்பை விளைத்து விடுகிறது. அதன் புகையோ சொல்ல வேண்டிய தில்லை. மூளையையும், இருதயத்தையும் கெடுத்துச் சுகத்தைக் கெடுத்து விடுகிறது. மண்ணெண்ணெய் விளக்கு ஆகாயத்தை உஷ்ணப் படுத்துவதுடன், அதனை மிகவும் அசுத்தப் படுத்துகிறது.

'சிம்னி' யில்லாத தகர விளக்குகளில்தான் புகை வருகிற தென்றும், மிகுந்த விலை கொடுத்து வாங்கும் நாகரீக விளக்குகளில் புகை யேது என்றும் நாகரீகர்கள்கேள்வி கேட்கலாம். புகை கிளம்புவது நமது கண்களுக்குத் தெரியவில்லையே யன்றி, அவற்றிலிருந்தும் புகை வருவதில் குறை வில்லை.

பெரிய வீடுகளில் வாழும் பிரபுக்கள் மண்ணெண்ணெய் விளக்குகளின் தீமைகளை அவ்வளவாக அநுபவிக்க வில்லை. ஆனால் வறுமை மிகுந்த இந்த நாட்டிலே சிறிய வீடுகளிலும் குடிசைகளிலும் வசிக்கும் மத்ய வகுப்பாரும் ஏழை ஜனங்களும் மண்ணெண்ணெய் விளக்கினால், அவர்கள் பெரும்பாலும் அறியாமலே—அநுபவித்து வரும் கேடுகள் அளவிறந்தன. வீடெல்லாம் புகைக் காடு. சுவாசிப்ப தெல்லாம் மண்ணெண்ணெய் விளக்கின் புகை. நகரங்களில் மட்டு மல்ல, நாட்டுப் புரங்களிலும் சிறிய வீடுகளில் வசிக்கும் ஜனங்களில் பெரும் பாலார் இந்த மண்ணெண்ணெய் விளக்குகளை உபயோகிப்பதால், அவர்கள் அவற்றின் விஷப் புகையையே சுவாசிக்கிறார்கள். பெட்ரூம் லைட் என்ற படுக்கையறை விளக்குகளையும், மற்ற விளக்குகளையும், வைத்துக்கொண்டு சிறிய அறைகளிலும் வீடுகளிலும் படுத்து நித்திரை செய்வோர் இரவெல்லாம் மண்ணெண்ணெய் விளக்கின் புகையைச் சுவாசித்து, மூக்கெல்லாம் கருப்பாய், காலையில் மூக்கை சிந்தும்பொழுதும்

காறி உமிழும் பொழுதும் சளி புகையுடன் வெளிவருகிறதைக் காண்பது சாதாரண சம்பவமாயிருக்கிறது! நகரங்கள் என்ற நரகங்களில், காற்றில்லாத கூற்றுவன் வீடுகளில் இரவெல்லாம் விஷப் புகையைச் சுவாசித்து, வாழும் புருஷர்களும், பெண்களும், குழந்தைகளும் அடிக்கடி சுகவீனமடைவது அதிசயமா?

மண்ணெண்ணெய் விளக்கேற்றி வைத்து விட்டு ஒரு சிறிய அறையில் படுத்துத் தூங்கிய தம்பதிகள் அதன் விஷப் புகையைச் சுவாசித்து மறுநாள் காலையில் எழுந்திராமல் எமலோகஞ் சென்ற கதைகளும் உண்டு.

ஒரு சிறிய அகல் நிறைய விளக்கெண்ணெய் விட்டு, ஒரு சிறிய திரிப் போட்டு ஏற்றி வைத்து விடுங்கள். அது இரவெல்லாம் தூண்டா விளக்காய்ச் சுடர் விளக்காய் எரிந்து கொண்டிருக்கும். அதனைச் சாதுவான பசுவுக்கு நிகராகக் கூறலாம். ஆனல் மண்ணெண்ணெய் விளக்கோ பேய், புலி. பேயுடனும் புலியுடனும் உறவாடுவதுபோல மண்ணெண்ணெய் விளக்குடன் உறவாட வேண்டும். எந்த நிமிஷமும் ஆபத்து. கை பட்டால், கால் பட்டால், மறந்தால், அயர்ந்தால் ஆபத்து. அதனல் மாண்டவர்களும் பலர். மாளக் கூடியவர்களும் பலர்.

தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு மண்ணெண்ணெய் துணை. கோபம் சிறிது நேரம் இருந்து ஆறி விடுகிறது. அந்தச் சிறிது நேரத்திலே தற் கொலை செய்துகொள்ள விரும்புகிறுள் ஒரு பெண். மண்ணெண்ணெய் அவளுக்குத் துணை புரிகின்றது. விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், தேங்கா யெண்ணெய்களைப் பத்துக் குடம் தலையில் அபிஷேகம் செய்துகொண்டு தீ வைத்தாலும் ஆபத் துண்டா?

நமது நாட்டு மக்களிலே பலர் இளமையிலேயே பார்வை யிழந்து குருடர்களாய்க் கண்ணுடி தேடுவதற்கு மண்ணெண்ணெய் விளக்கு ஒரு காரணம்.

மண்ணெண்ணெய் விளக்கினல் இந்த நாட்டாரில் பெரும்பாலர் அறிந்தும் அறியாமலும் அடைந்து வரும் கேடுகளை அரசாங்கத்தார் அறிந்தார்களானல், நாட்டிலே

விளையும் கொட்டைமுத்து, எள் முதலியனவும், உற்பத்தியாகும் விளக் கெண்ணெய் முதலியனவும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாகாமல் தடுத்து, நாட்டு எண்ணெய்களை விலை குறையும்படி செய்யலாம். லோகோபகாரிகளும் தேசாபிமானிகளும் அறிந்தால், மண்ணெண்ணெய் விளக்கை ஒழிக்கும்படி நாடெங்கும் ஒரு பெரிய பிரசாரம் நடத்தலாம.

இந்த ஏழை நாட்டில் மண்ணெண்ணெய் விளக்கு செலவு குறைவு என்று சிலர் கூறலாம். வாஸ்தவத்தில் செலவு குறைவா யிருந்தாலும், குணம் பெரிதா, பணம் பெரிதா? விளக்கெண்ணெய் விளக்குகள் லாபமும் நன்மையும் அளிக்கின்றன. மண்ணெண்ணெய் விளக்கு நஷ்டமும் தீமையையும் விளைக்கின்றன. கால் ரூபாய்க்கோ, ஒரு ரூபாய்க்கோ, பத்து ரூபாய்க்கோ, ஓர் அழகான பித்தளை விளக்கு, வெண்கல விளக்கு வாங்கினால், அது நூறு வருஷம், உங்கள் பேரன், பூட்டன் காலம் வரை மட்டுமல்ல, ஆயிரம் வருஷம்—பூமி உள்ளவரை இருக்கக் கூடும். மண்ணெண்ணெய் விளக்கு—தகர விளக்கு கெட்டுப்போனால் குப்பையில் போடவேண்டும், பத்து ரூபாய் கொடுத்து வாங்கும் ஜெர்மன் விளக்கா யிருந்தாலும், அது கெட்டுப் போனால், தெருவில் எறிய வேண்டியதுதான். இனி, சிம்னி—ஆறு மாதத்திற்கு ஒரு சிம்னி யென்று வைத்துக் கொண்டாலும், உங்கள் ஆயுட்காலத்தில், வாங்கும் சிம்னிகளைக் கணக்கிட்டுப் பாருங்கள்! இனி, அதன் புகையோ உங்கள் ஆயுளை, வாழவேண்டிய உங்கள் அருமைக் குழந்தைகளின் ஆயுளைக் குறைத்து வருகின்றது!

திருவிளக்கு—தெய்வம், சுகம், லாபம், அழகு.

மண்ணெண்ணெய் விளக்கு—பேய், நோய், நஷ்டம், அசுத்தம்.

மண்ணெண்ணெய் விளக்குக்காகப் போடும் பணம் அந்நிய நாட்டுக்குச் செல்லுகிறது. எண்ணெயும் பெரும்பாலும் அந்நிய நாட்டு எண்ணெயே. அதற்குச் செலவிடும் பணமும் வீணே.

லக்ஷ்மி

விளக்கெண்ணெய் விளக்கு வெளிச்ச மில்லை! நகரத்தில் படித்தவர்களென்று சொல்லப் படுகிற நாகரிகக் குருடர்களில் சிலர் இவ்வாறு சொல்லுகிறார்கள்! இதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் கண்ணும் கருத்தும் கெட்டுப் போயிருக்கின்றன. அடுத்த ஜென்மத்தில்தான் அவர்களுக்கு நல்ல கண் ஏற்படும்.

உங்கள் வீடுகளில் திருவிளக் கேற்றித் தெய்வந் தொழுங்கள் என்று நமது சகோதரிகளான கிரக லக்ஷ்மிகளை நாம் வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறோம். அப்பொழுதுதான் உங்களுக்கு மகா லக்ஷ்மியின் கடாக்ஷம் உண்டாகும்.

நமது சகோதரர்கள் இவ் விஷயத்தில் துணை புரிய வேண்டும். நாட்டிலிருந்து பல வகை எண்ணெய்களும், எண்ணெய் வித்துக்களும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாவதைத் தடுக்குமாறு முயலவேண்டும். நாட்டிலே, எள், கொட்டை முத்து முதலிய எண்ணெய் வித்துக்களை அதிகமாகப் பயரிட்டு, உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். இரண்டும் செய்தால், விளக்கெண்ணெய் முதலிய நல்லெண்ணெய்களின் விலை மிகவும் குறையும்.

தெய்வ சம்பத்து நிறைந்த நாடாக விளங்கி, இன்று வறுமையும் சிறுமையும் நிறைந்த நாடாக விளங்கும் நமது தாய்த் திரு நாட்டில் மீண்டும் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட வேண்டுமானால், நாம் நமது முன்னோர் முறையை மேற்கொண்டு திருவிளக்கு லக்ஷ்மியைத் தொழ வேண்டும்.

மங்கலத் தங்க விளக் கேற்றும்—நல்ல
மணிவிளக் கொளிசெயும் கிளைவிளக்கு.
துங்கமான சுடர் விளக்கு—நம்
ஜோதி விளக்கை ஏற்றிடுமே!

திருவிளக் கேற்றித் தெய்வந் தொழும்—நம்
தேசம் உய்யத் தெய்வந் தொழும்!
கருது மாலையும் காலையிலும்—நம்
கனக விளக்கைத் தொழுதிடுமே!

ஸத்யம்

ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக ஸ்வாமிகள் எழுதியது.

ஸத்ய மென்பது உண்மை, அதாவது உள்ளது எனப் பொருள்படும். உள்ளதெனின் எக்காலத்தும் உள்ளதெனவே கொள்ளற்பாலது. என்னை? "உள்ளது போகா" தாதலின். உள்ளதாகவே, என்றும் மாறுத லடையாதது மாகின்றது. என்னை? விகாரங்கள் யாவும் தோன்றும் பொருள்களிலேயே உள வாதலானும் உள்பொருள் என்றும் தோன்றற் கிடனின் றாதலானு மென்க. எனவே ஸத்ய மென்பது மாறுத லடையா தெக்காலத்து முள்ள பொருளென் றாகின்றது. இக்கருத்துப் பற்றியே 'ஸதயம்' என்னும் பதம் கடவுளைக் குறிக்க நிற்கின்றது. இது நிற்க.

ஸத்யத்திற்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றி விசாரிப்பாம். நம்மிடத்தில் அநேக ஸக்திக ளிருக்கின்றன வென்பது யாவர்க்கும் வெளிப்படை. அவற்றுள் ப்ரதான மானவை யிரண்டேயாம். அவையாவன :—புறத்திலுள்ளவைகளை க்ரகிப்ப தொன்று. அகத்திலுள்ளவைகளைத் தோற்றுவிப்ப தொன்று. இவற்றுள் முன்னை யதற்கு ஸாதனமா யிருப்பவை மெய், வாய், கண், மூக்குச் செவியாகிய பஞ்சேந்த்ரியங்களும் மனமுமாம். பின்னை யதற்கு, மனமும் வாக்கு, பாதம், பாணி, பாயுரு முதலிய பஞ்சேந் த்ரியங்களுமாம். இவ்விரு சக்திகளும் தொழிற் படுதற்குப் பொதுவான காரணம் மனமாகலின், ஒன்று தொழிற்படுங்கால் மற்றொன்று தொழிற்படுவ தின்று. இவ்விரண்டினுள் ஒவ்வொன்றும் இரண்டு விதத்தில் தொழிற் படுகின்றது. அவையாவன :—உள்ளதை உள்ளவாறு க்ரகித்தலும் உள்ளதை உள்ளவாறு தோற்றுவித்தலு மொன்று. உள்ளதை விபரீதமாக க்ரகித்தலும் உள்ளதை விபரீதமாகத் தோற்றுவித்தலும் மற்றொன்று. ஸத்ய மென்பது உள்பொருளைக் குறிக்கின்றதாகலின், உள்ளதை உள்ளவாறு க்ரகித்தலும், உள்ளதை உள்ளவாறு தோற்றுவித்தலும் அதனுளடங்கும். அடங்கவே ஏனைய விரண்டும் அஸத்யத்துட் படு மென்பது பெறப்படுகின்றது. இதுவரை கூறிவந்ததினின்றும் ஸத்ய மென்பதில் கடவுளும், அவரை யுணர்தலும், உணர்ந்ததை (அவர் தன்மையைத்) தோற்றுவித்தலும் அமையுமென அறிகின்றா மன்றோ? இது நிற்க.

நாம் ஒவ்வொரு விஷயத்தையும் க்ரகிக்குங்கால் அவ்வவ் விஷயாகாரமாகவே 1 யிருக்கின்றோமென அறியத்தக்கது. ஆனால், "நாம் ஸரீரத்தின் வடிவமா யிருக்க, விஷயங்களை க்ரகிக்குங்கால்

---

1 விஷயாகாரம்=விஷயத்தின் வடிவம்.

அவற்றின் வடிவமாக இருக்கின்ளு மென்பது எங்ஙனம் பொருந் தும்?'' என்னும் ஆக்ஷேபம் பலர்க்குத் தோன்றலாம். இஃது ஊன்றி நோக்காக் குறையால் தோன்றுவது. நமது சரீரமே நாமென்னும் எண்ணம் எம்மட்டுளதோ அம்மட்டும் இங்ஙனமே தோன்றற் பாலது. அமெரிக்கா (America) வில் ஒரு ஸ்திரீயானவள் தனது ஸரீரம் கண்ணாடியினால் உண்டாக்கப்பட்ட தென்று வெகு நாளாய் நினைத்துக்கொண்டு சுவர், கதவு முதலியவைகட்கு ஸமீப மாய்ச் செல்லும் பொழுதெல்லாம் அவைகளிற் பட்டால் உடைந்து போமெனக் கருதி, மிகவும் ஜாக்கிரதையாக நடமாடி வந்தாளெனக் கேட்டிருக்கின்ளும். அதுபோல் நமது எண்ணத்தினாலேயே நாம் சரீரத்தின் வடிவமா யிருப்பதாகத் தோன்றுகின்றதே தவிர வேறன்று. ஒருவன் மேஜையை விஷயமாக்கும்போது 2 மேஜையும் அதனை க்ரகிக்கும் அறிவும் ஆக இரண்டு பொருள்க ளிருக்கின்றன. அவனே நாற்காலியை விஷயமாக்குகிறு னென வைத்துக்கொள் வோம். அப்பொழுதும் நாற்காலியும் அதனை யறியும் அறிவுமாகிய இரண்டு பொருள்களே இருக்கின்றன. அதுபோலவே, அவன் சரீ ரத்தை அவன் விஷயமாக்குங் காலத்திலும் சரீரமும் அதனையறியும் அறிவுமாகிய இரண்டு பொருள்களுமே இருக்கின்றன. இங்ஙனம் ஸாதாரணமாய் மனிதர்கள் தங்களுடைய ஜாக்ர ஸ்வப்ந அவஸ்தை களில் ஏதேனும் ஓர் விஷயத்தை க்ரகித்துக் கொண்டே இருக்கின் ருர்கள்; அக் காலங்களிலெல்லாம் க்ரகிக்கப்பட்ட விஷயமும் அதனை அறியும் அறிவுமே இருந்துகொண் டிருக்கின்றன. இவ்விரண்டினுள் விஷயங்கள் மாத்திரம் மாறிமாறி வர, அறிவோ மாருது அவைகளை யெல்லாம் க்ரகித்துக் கொண்டிருக்கின்றது. எதார்த்தம் இங்ஙன மிருத்தலின், நமது வடிவம் அறிவா? சரீரமா? சரீர மென்பீராயின் நமக்கு விஷயமாகும் மேஜையும் நமது வடிவமெனக் கூறவேண்டி வரும். ஆதலின் உண்மை அஃதன்று. பின், நமது ஸ்வரூபம் யாதெனின், அறிவேயாம்.

இனி, விஷயங்கள் நமக்கெங்ஙனம் புலப்படுகின்ற தென ஆலோசிப்பாம். ஐரோப்பிய சாஸ்திரிகள் கூறுவதாவது:—வெளி யிலுள்ள விஷயங்களின் ரூபங்கள் கதிரொளியின் மூலமாக நேத் ரேந்திரியத்தில் ப்ரதிபிம்பிக்கின்றன. அவற்றை உணர்ச்சி (Sensory) நரம்புகள் மூளைக்குக்கொண்டு போவதால் விஷய ப்ரக்ஞை 3 யுண் டாகின்றது. இதுபோலவே, சப்தமும் கந்தமும் அவையுண்டாகும் இடத்தினின்றும் வாயுவின் சலனத்தினால் நடத்தப்பட்டு ச்ரோத்ர 4 ஆக்ராண 5 இந்த்ரியங்களில் தாக்க, அங்குள்ள வுணர்ச்சி நரம்புகள் மூளைக்கு கொண்டு போவதாலும், ஸ்பரிச விஷயங்கள் த்வக்கு,

2. விஷயமாக்கும்=க்ரகிக்கும்.
3 ப்ரக்ஞை=அறிவு.
4 ச்ரோத்ரம்=செவி.
5 ஆக்ராணம்=மூக்கு.

சிங்வை 6 களோடு ஸம்பந்தப்படுங்கால் அவற்றிலுள்ள உணர்ச்சி நரம்பு மூளைக்குக் கொண்டுபோவதாலும் க்ரகிக்கப்படுகின்றன வென்பதே. நமது சாஸ்திரங்களின் கருத்து என்னையெனின், நேத்ர ச்ரோத்ரேந்திரியங்கட்கும் பொருள்களுக்கும் ஸம்பந்த முண்டாகும் போது இந்த்ரியங்கள் மூலமாக அந்தக் கரணத் 7 தின் விர்த்தி வெளியிற் சென்று விஷயாகாரமாகியும், மற்ற இந்த்ரியங்களுக்கும் அவற்றின் விஷயங்களுக்கும் ஸம்பந்த முண்டாகும்போது அவ்வவ் விந்த்ரியங்களின் கோளகங்க 8 ளிருந்தே விஷயகாரமாகியும் க்ரகிக்கின்ற தென்பதாம். இவ்விரண்டனுள் உண்மை எதுவாயினும் அவற்றின் முடிவு ஒன்றுயிருக்கின்றது. ஐரோப்பிய சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி மூளையின் சக்தியே (மனம் அல்லது அறிவே) விஷயாகார மாகின்றது. நமது சாஸ்திரங்களின் கருத்துப்படியும் (அறிவின் சக்திக்குச் ஸாதனமாயிருக்கும்) அந்தக்கரண விர்த்தியே விஷயகார மாகின்றது. ஆதலின், அறிவே விஷயாகார மாகின்ற தென்றும். விர்த்தி அந்தக்கரணத்தை விட்டும் அந்தக் கரணம் அறிவை விட்டும் தொழிற்படுத லின் றென் றறிக. இது வரை கூறிவந்ததால் அறிவே அதாவது நாமே விஷயாகாரமாகித் தான் ஒவ்வொரு விஷயங்களையும் க்ரகிக்கிறு மென்பது புலப்படுகின்ற தன்றே? அது போலவே எவ்விஷயத்தையேனும் தோற்றுவிக்குங் காலத்தும் நாம் அவ்விஷயாகாரமாக விருந்தே தோற்று விக்கிறு மென் றறியத் தக்கது. இங்ஙன மிருத்தலின்,

நமது வாழ்க்கை இவ்வுலகத்தின்கண் ஸத்யமாயிருக்க வேண்டுமாயின், நாம் ஸத்யத்தை (கடவுளை) யுணர்ந்து அதாவது ஸத்யமே (கடவுளே) யாகி, ஸத்யத்தையே (கடவுட்டன்மையையே) தோற்றுவிக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது. பெறப்படவே இதற்கு மாறுக நடைபெறும் வாழ்க்கையாவும் அஸத்திய மென்றேற்படுகின்றன வன்றே?

உலகத்தில் ஸாதாரண ஜநங்கள் மெய்வாழ்ச்கையைத் துறந்து பொய்வாழ்க்கையிலேயே ஆநந்திக்கின்றனர். பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளுதலாலும் அகத்திலுள்ளதை உள்ளவாறு தோற்றுவிக்காது கபடமாகவே நடித்தலாலும் அன்னேரும் அஸத்தியப்பொருளே யாகி மரித்தவ ராகின்றனர். ஜீவித்திருத்த லென்பது ஸத்திய வாழ்க்கையிற் பொருந்துமே யல்லது அஸத்திய வாழ்க்கையில் எங்ஙனம் பொருந்தும்?

---

6. சிங்கை = நாக்கு.

7 அந்தக்கரணம் = உட்கரணம் அதாவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

8 கோளகம் = வட்டம்; இவ்விடத்தில் இந்த்ரியங்க ளிருக்குமிடம்.

"ஸத்திபத்தினும் மேலான ஸமயம் பிறிதொன் றில்லை" எனப் பெரியோர் கூறியிருக்கின்றன ராதலின், அதனையே புருஷார்த்த மென யாவரும் கைக்கொண்டு ஒழுகவேண்டியவராயிருக்க, அந்தோ! பெரும்பாலரின் அறிவு, எண்ணம், பேச்சு, செய்கையாகிய யாவும் அஸத்யமாயிருப்பின், அவரது நிலைமையைப் பற்றிப் பரிதபிக்காது யாது செய்வாம்?

மேற்கூறிய ப்ரகாரம் ஸத்யமாக வாழ்தல் ப்ரயாஸமாயிருப் பினும் அவரவர் பக்குவத்திற் கேற்றவாறு அதற்குரிய வழியில் நிற் றலேனு மாவச்யக மன்றோ? அதுவும் செய்கின்றன ரில்லையே!

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

இதன் பொருள்:—மெய்மை யென்று சிறப்பித்துச் சொல்லப் படுவது யாதென்று வினவினால், அது [பிறிதோ ருயிர்க்கு] சிறிதா யினும் தீமையைத் தராத சொற்களைச் சொல்லுதல்) என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியிருப்பதின் தாற்பரியம் யாதெனின், நடந்ததைச் சொல்லுவதும் பிறர்க்கு எதார்த்தத்தில் தீமையை விளைவிக்குமாயின், வாய்மை யாகாதென் பதே. இதனால், பிறர்க் கிதம் செய்தலையே தலையாகக் கொள்ளல் வேண்டுமென்பது வெளியாகின்றது. இஃதே அவர் கருத்தென்பது,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று கூறி யிருத்தலினாலும் நன்கு விளங்கும். பிறர்க்கிதம் செய் யும் வார்த்தைகளையே உபயோகிக்கவேண்டுமென்று கூறியதினால், எண்ணமும் செய்கையும் அவ்வாறே யிருக்கவேண்டு மென்பதும் அதனுள் அடங்கி யிருக்கின்றது. எண்ணமோ, செய்கையோ வேரு கவும் சொல் மாத்ரம் இனிமையாகவும் காட்டுவது பொய்யினும் பொய்யேயாகும். இவ்வாய்மையை ஒருவன் கடைப் பிடிக்கினும் அஃது ஸத்ய வாழ்க்கைக்கு நடாத்துமன்றோ? இந்நிலையில் நிற் பவர் தாம் இப்பூவுலகின் கண் எத்தனை பேர் இருப்பார்கள்? மிகவும் சிலரே யென அஞ்சாது யாவரும் கூறலாமே!

ம்ருகங்களைப் பார்க்கிலும் மனிதனுக்கு சிறப்பாயுள்ளன யாவை? வாக்கும் பகுத்தறிவு மன்றோ? மனிதன் என்பான் தனக்கு விசேஷ மாய்க் கிடைத்துள்ள பகுத்தறிவை உபயோகித்து, ஸத்ய மொழி களைக் கூறும் கடமை யுடையவன் என்பது அவனது அமைப்பினு லேயே ப்ரத்தியக்ஷ மாகின்றது. இக்கடமையை ஓராது தமது வாக் கிந்த்ரியம் சென்றவாறு பொய் மொழிகளைக் கூறி, உம்மை [9] யில் இறுமாந்தாரே இம்மையில் மூகைய [10] ராகக் காணப்படுபவ ரென் பார் கர்மத்தின் ரகஸ்யங்களை ஓர்ந்த மூதறி வுடையோர்.

---

9 உம்மை = முன் பிறப்பு. 10 மூகையர் = ஊமையர்.

ஆதலின், பொய்வாழ்வில் மரித்துக்கிடப்பவராகிய யாவரும் அவரது எச்சரிக்கையை நன்குணர்ந்து, மனோவாக்குக் காயங்களாகிய த்ரிகரணங்களும் ஸத்யத்தையே நினைக்கவும், பேசவும், செய்யவும் பழக்கி, உயிர்த்தெழுந்து, மெய்வாழ்வெய்தி, நித்யானந்தத்தை யடையக் கடவர்.

> "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற."

குழந்தைப் பாட்டு

சோம்பேறிப் பையன்.

ஊரும் எறும்பே! ஒருமணி நேரம்
ஒளித்து விளையாட வாராயோ?
நேர மில்லை; மழைக் காலம் நெருங்குமுன்
நெல்மணி சேர்த்திட வேண்டு மப்பா (1)
மாமலர் தோறும் திரியும் வண்டே!—பாண்டி
வட்டாட என்கூட வாராயோ?
ஆழ! நல் வேளை அலர்மலர் மூடுமுன்
அள்ளித்தேன் சேர்த்திட வேண்டுமப்பா! (2)
காகமே! கால்மணி நேர மென்னோடு
களித்து விளையாட வாராயோ?
ஆஹா! நேர மெனக்கில்லை யப்பா!—மழைக்
காகும் கூடுகட்ட வேண்டு மப்பா! (3)
ஓடுசிற் றோடே! ஒருநிமிஷம் விளை
யாட உவந்துநீ வாராயோ?
நாடு செழிக்க நன்னீர்விட வேண்டுமென்
நண்பனே! போதெனக் கில்லையப்பா! (4)
வானத் துலாவிடும் சூரியனே! கீழே
வந்து விளையாட வாராயோ?
போனகம் கொள்ளவும் நேரமில்லை புத்தி
கெட்டபையா! வர மாட்டே னப்பா! (5)
ஓகோ! இதுவென்ன ஒருவரும் என்கூட
ஓடி விளையாட வாராரோ?
ஆகாத பிள்ளையோ நான்மட்டும் அந்தப்பேர்
அண்டாமல் பார்த்திட வேண்டுமினி. (6)

S. முத்துசாமி பிள்ளை.

பரதமகள் பாதச்சிலம்பு

[ஸ்ரீமான் சோமசுந்தர பாரதி, M.A., M.L.]

பரல் க.

அடிநான்காய்த் தம்மி லளவொத்து வந்த
இரட்டைக்குறள் வெண் செந்துறைகள்.

1. பாடுது நாம் பரதமகள் பெருமையினை ; அவள் பொன்
பரவுபதம் இதமுமுயர் பதமுநிதம் தருமே.
ஏடவிழ்தண் மரையுவப்பள், எங்களருந் தாயை
என்று மறவாது மனத்திருத்தி யிறைஞ்சிடுவாம்.

2. குளிர்மதி விண்ணொளிர்பரிதி சுலவுநெடுங்காலங்
குறித்தொழியக் கூறவொண்ணு வயதுடையள், குமரி ;
நளிர்பனிவெண்ணிறமிறவா நல்லிமையத்தலையள்,
நதிகளிறவாதவளம் நல்குமெழி லினையாள். பாடுதுநாம் பரத—
மகள் பெருமையினை.

3. நங்கைநம தாரியைமுன் நாகரிகக் குழவி
நல்கி, உலகெங்குமொளி நல்கவெனப் பரிவால்
கங்கைதவழ் மார்பினெடுங் காலம் வளர்த்ததுபின்
கடல்வலயமுழுதுலவக் கண்டுமகிழ் பெரியாள் (பாடுதுநாம்)

4. பண்டையுலகனைத்தினுக்கும் பழமகளிந்தியையே
பலநாடும் பருவமுந் தன்பாலதெனும் பான்மை
கண்டுகொள,—என்றுமிளகாத பனிமுதலாக்
காயும்வெயிற் பலபடியுங்காட்டுவள் தன்னகத்தே (பாடுதுநாம்)

5. சிந்துமுதற் கங்கையுங் கோதாவிரியுந் தெய்வத்
தெள்ளுதமிழ்ப் பொருனைவிரி காவிரி வைகையுமே
வந்து வளங் கொழிக்கநிதஞ் சிந்தைமிகக்களித்து
வழுவா நல்லற மடிமேல் வளருமெழில் மங்கை (பாடுதுநாம்)

6. அரும்பழ நாட்டரசரெலா மதிசயித்து வழுத்த
ஆய்ந்தமணிக்குவையொடு பொன் முத்து மரதனமும்,
தருவிலுயர் சந்தனம், பொன்வேய்ந்து முழந்தாளும்
தாழமிகப் பதியு மருங் கம் பளமுந் தருவாள் (பாடுதுநாம்)

7. என்னஇரும்பூதெனவெங் கும்பிறர்களென்றும்
இருந்துவியந்துவக்குமெழிலரும்பணிகளிழைத்த
உன்னத நல்யானை மருப்புதவுபல பொருள், கை
புணர்ந்தறியா மெல்லிய பூந்துகிலமுமுடையாள் (பாடுதுநாம்)

8. வழிவழியாய் வணிகர்பல நாடுடையார் வந்து
வழுத்துமவர் வாங்கு மரும் பண்டமெலாம் வழங்கி,
தொழிலுழவென்றிருபத மே லுலவுமகள், தொன்று [நாம்)
தொட்டுலகுக் குணவருத்தி, உடையளிக்குந் தூயோள் (பாடுது

9. வாணிபமெலா மொருங்கே வந்திரக்க, வினைமை
வாழ்ந்து முதிர்ந்தோங்கிய சீர்நாடுடையேம் ; எனிலின்
றுணியொ டோரூசி முதலாய பொருளனைத்தும்
அயலவர்பா லிரந்துபெற, அயர்ந்திருப்ப தழகே (பாடுதுநாம்)

10. பண்டைநிலைமறந்தும், நலநமக்கிதெனவறிந்தும்,
பையஅயலார் நெருங்கி நம்முரிமை பறிக்கக்
கண்டும், மடிகடிந்து வினைகடைப்பிடிக்கிலே மேல்,
கடுமிடிக்கிங் கடிமைநிலை விடும்வகை காண்கிலமே (பாடுதுநாம்)

11. வாய்மைதவிராது தொழில் வாய்த்த வழியாற்றி
வாழ்தல்புகழ் ; சோம்புபழி ; என்று வழிகாட்டித்
தூயபெருவள்ளுவனார் வாழ்ந்த புகழ்நாட்டேம், [(பாடுதுநாம்)
தொழிலிழித்துத் தொழும்பு விழைந்தழிந் தொழிவே மல்லேம்.

12. ஆதி தெரியாத மறை யளித்ததின முதலா
ஆனந்தச்சுவை யமுத மனை வரையு மருத்த,
ஓதிய நல்லிசைக் கடலை யுழக்கியவான் புலவர்
ஒரு கோடிப் புதல்வரு வந்தே வழுத்துந் தாயாம். (பாடுதுநாம்)

13. உடையிலராய்க் காடுமலை யுழன்று பிற நாட்டார்
உரையிலரா யுளறிய தொல்லரும் பழையகாலம்,
கடைதயிரின் வெண்ணெயெனக் கடைந்தறிவின் போதங்
கனிந்த கலை யுபநிடதங் காட்டிய சீர்நங்கை. (பாடுதுநாம்)

14. பொய்யுலக வாழ்க்கையெனும் புன்மொழியி னளவும்,
புனித நெடுங்கடமை கடைப்பிடிப்பதற முயிர்க்கென்
மெய்யளவும், கையறவி னிழிவும், முறைநிறுத்து
மிகமுழங் தனியுயர் தீங் கீதைபயில் வாயள். (பாடுது நாம்)

15. நாடெதிலு மொழியெதிலும் நாடரிதா மிதுபோல்
நல்லற நூ லென் றெவரும் நச்சுதமிழ்க் குறளும்,
ஏடவிழ் பொன்மலர்ப் பிரமனீன்ற மறைநூலும்,
என்று மிறவாதபுகழ் நின்றுசெயு மெழிலாள். (பாடுதுநாம்)

16. தலையோடு தனைப்பிரித்து நோய்துடைத்துத் திரும்பத்
தைத்துயிர் வாழ்வுதவு மருந்தேரையர்க்குந் தாயாம் ;
கலைமருந்தின் கடவுளராஞ் சாருகர் சுஸ்ருதர்பால்
கற்றயலார் நிதம்வழுத்தப் பெற்றபுகழ் நெடியோள்.
(பாடுதுநாம்)

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

178-ம் பக்கம் தொடர்ச்சி.

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

ஆரூரர் எடுத்த பொன்னை மாற்றுரைத்துப் பார்த்தார். அது முன் எடுத்த மாற்றுக்குத் தாழ்ந்திருக்கக் கண்டு இறைவனைப் பின்னும் பரவினர். உடனே பொன்னெல்லாம் மாற்றிற் சிறந்த செம்பொன் னாயிற்று. ஆரூரரும் திருமூலட்டானரைப் போற்றித் தமது மாளிகை வந்து சேர்ந்தனர்.

9 ஸ்தல யாத்திரை (3).

பின்னர், ஒரு நாள், ஈசன் தலங்களைக் காணும் அவா மேலிட, திருவாரூரைவிட்டுப் புறப்பட்டுத் திருநள்ளாறு, திருக்கடவூர், கடவூர் மயானம், திருவலம்புறம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, செம்பொன்பள்ளி, திரு நின்றியூர், திரு நீடூர், திருப்புன்கூர், திருக்கோலக்கா, சீகாழி முதலிய தலங்களைத் தரிசித்துக் குருகாவூர் என்னுந் தலத்துக்கு வந்துகொண்டிருந்தார்.

(திருக் குருகாவூரிற் பசி தீர்த்தது.)

அப்போது தாகமும் பசியும் மேலிட்டு இவர் வருந்துவதை யறிந்த சிவபிரான் தண்ணீரும் பொதி சோறுந் தயாராக வைத்து நிழற்பந்த ரொன்றும் நிருமித்துத் தாமும் ஒரு வேதியர் கோலம் பூண்டு இவர் வரும் வழியில் அமர்ந்திருந்தனர். பசியொடு வந்த ஆரூரர் பந்தரின் நிழலிற் றங்கி மறையவருடன் அன்பொடு பேசிக் கொண்டிருக்க, மறையவரும் "நீர் மிகப் பசியுடன் இருக்கின்றீர். பொதிசோறு தருகின்றேன்" எனக் கூற ஆரூரரும் அதற்கிசைந்து தமது பரிசனங்க ளெல்லாரும் இனிது அருந்தத் தாமும் உண்டு பசி தணிந்தனர். பொதிசோறும் தண்ணீரும் அமுதம் போ லிருந்தன. உண்ட இளைப்பினாற் பந்தர்க்கீழ் யாவரும் படுத்துறங்கினர்.

உடனே வேதியர் பந்தருடன் மறைந்தனர். நாவலூரரும் விழித்தெழுந்து

இத்தனை யாமாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே திருகாவூர் வெள்ளடை நீயன்றே.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக வுண்பலிக் குழல்வானே
காடுநின் னிடமாகக் கடுவிரு ண டமாடும்
வேடனே திருகாவூர் வெள்ளடை நீயன்றே.

எனவரும் 29-ஆவது திருப்பதிகத்தைப் பாடி இறைவன் திருக்கூத்தை நினைத்து மகிழ்ந்து திருக்கோயிலுக்குச் சென்று வணங்கினர்.

(இறைவன் அன்ன மிரந் தூட்டினது.)

பின்னர்த் திருக்கழிப்பாலை, தில்லை, திருத்தினைநகர் என்னுந் தலங்களை வணங்கித் தமது சொந்த ஊராம் திருநாவலூருக்குப் போந்து அங்கு இறைவனை வணங்கிச்சென்று திருக்கழுக்குன்றந் தரிசித்துத் திருக்கச்சூர் போந்து பணிந்தனர். தமக்கு அமுது சமைத்தளிக்கும் பரிசனம் வந்து சேராது நேரமாக, ஆரூரர் பசியால் வருந்தித் திருக்கச்சூர் மதிற் புறத்தொருசார் அமர்ந்திருந்தனர். அப்போது இறைவன் திருவோடொன் றேந்தி மறையவர் போல வந்து "ஐயா! பசியால் வருந்தியுள்ளீர். இதோ போய் யான் சோறு இரந்து உமக்குக் கொண்டுவந்து தருகிறேன்! சற்று அமரும்" எனச் செப்பித் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென் றிரந்தார். இரந்தபின் ஆரூரரிடம் வந்து "இரந்து கொண்டுவந்தேன் சோறுங் கறியும்; பசி தீர உண்பீராக" என அவருக்கு அளித்தனர். ஆரூரரும் "ஐயா! நீர் மிக்க அருளுடையவர்" எனக் கூறித் தொழுதுவாங்கி அருகிருந்த தொண்டர்களுடன் உண்ணும் போது பக்கத்திருந்த மறையவர் எப்படியோ மறைந்து போயினர். ஆரூரரும் "ஓஹோ! வந்த மறையவர் இறைவனே" எனத்தேறி அந்தோ! "என்பொருட்டோ இறைவனுக்கு இப்பாடு?" என இரங்கி

"முதுவா யோரி கதற முதுகாட் டெரிகொண் டாடல்
முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடு மலேயாள் மகடன்
மணவாளா
கதுவாய்த் தலேயிற் பலிகீ கொள்ளக் கண்டா லடியார்
கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூ ராலக் கோயி லம்மானே."

"கச்சே ரரவொன் றரையி லசைத்துக் கழலுஞ் சிலம்புங்
கலிக்கப் பலிக்கேன்
றுச்சம் போதா வூரூர்திரியக் கண்டா லடியா
நருகாரே
யிச்சை யறியோ மெங்கள் பெருமா னேயேழ்
பிறப்பு மெனேயாள்வா
யச்ச மில்லாக் கச்சூர் வடபா லாலக் கோயி லம்மானே"

எனவரும் 41-ஆவது திருப்பதிகத்தைப் பாடினர்.

(ஓணகாந்தன் தளியிற் பொன் பெற்றது.)

பின்னர், அங்கிருந்து திருக்காஞ்சி மாநகர் வந்து சேர்ந்தனர். அவ்வூரி லுள்ளோர் தமது நகரை அலங்கரித்து ஆரூரரை எதி ரேற்றனர். ஆரூரரும் காஞ்சியிலுள்ள காமகோட்டம், திருமேற்றளி முதலிய பல தளிகளேயும் பாடிப் பரவினர். பின்னர், ஓணகாந்தன் தளியிலமர்ந்துள்ள நாதரைப் பொன்வேண்டி,

"நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தம் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் *காண மில்லேக் கழலடி தொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி ஆழ்குழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறென் றருளிச் செய்யீ ரோண காந்தன் தளியு ளீரே."
என வரும் (5-ஆவது) திருப்பதிகத்தைப் பாடி எண்ணிலா நிதியைப் பெற்றனர்.

---

* காணம்=பொன்.

(இன்னும் வரும்)

குணவதி

(ஒரு சிறு கதை)

ஸ்ரீமதி பொன்னம்மாள்.

ஒரு குக்கிராமத்திலே ஒரு உழவனும் அவன் மனைவியும் சுகமாக வாழ்ந்து வந்தனர். உழவன் பெரிய சீமானல்லன். ஒரு சிறு வீடும் அவ்வீட்டைச் சுற்றி ஒரு தோட்டமும் மட்டுமே அவனுடைய ஆஸ்தி. தோட்டத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு குளம் இருந்தது. உழவனுடைய வாத்துகள் அக்குளத்தில் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும். தோட்ட வேலை முடிந்த பிறகு உழவனும் அவன் மனைவியும் வாத்துகள் நீரில் நீந்தி விளையாடுவதைக் கண்ணுற்று மகிழ்வடைந் திருப்பர்.

வாத்துகளைத் தவிர உழவனுக்கு ஒரு குதிரையும் இருந்தது. தன் தோட்டத்தில் விளையும் சாமான்களைக், குதிரைமேலேற்றிச், சந்தையிற் கொண்டுபோய் உழவன் விற்பனை செய்வான். குதிரைக்கு வேலையில்லாத காலங்களில் அதை அந்நியருக்குக் கூலிக்குக் கொடுப்பான்.

இவ்வாறாக உழவனும் மனைவியும் சுகமாக வாழ்ந்து வரவே, நாளேற ஏற, அவர்களுக்கு வயது முதிர்ந்து வந்ததோடு வறுமையும் பெருகி வந்தது. கிழத்தனம் வரவர உழவன் கிறுக்குப் பிடித்தவன் போலானான். பல பொழுதும் அவன் மடத்தனமான செயல்கள் செய்து வந்தான். ஆயினும் அன்பு மிகுந்த அவன் மனைவி அவனுடைய மடச் செயல்களுக்காக வருத்த மடைவதில்லை; அவனோடு வழக்காடுவது மில்லை. முன்னைப்போல இருவரும் ரம்மியமாகவே வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் உழவன் மனைவியைப் பார்த்து "அடியே! வாத்துக்கள் ஒவ்வொன்றையும் விற்றுச் சாப்பிட்டாய் விட்டது. கையில் காசு மில்லை. இன்று குதிரையைச் சந்தைக்குக் கொண்டுபோய் விற்று வருகிறேன்" என்று சொன்னான்.

"குதிரை ஒன்றுதான் பாக்கி யிருக்கிறது. அதையும் விற்பது எனக்குச் சங்கடந்தான். ஆனாலும் உமது இஷ்டப்படி செய்யும், உமக்குத் தெரியாத விஷயம் ஒன்று மில்லையே" என்று மனைவி விநயமாக மறுமொழி கூறினள்.

உழவன் குதிரையை ஓட்டிக்கொண்டு சந்தைக்குப் பிரயாண மானான். மனைவியும் வெகுதூரம் கூடச்சென்று வழியனுப்பித் திரும்பினள்.

II

உழவன் குதிரைமேல் சவாரிசெய்து கொண்டு போனான். வழியில் வேறு பலர் சந்தைக்குப் போவதைக் கண்டான். அவர்களில் ஒருவன் ஒரு பசுவைச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போனான்.

உழவன் அவனைப் பார்த்து—"உன் பசு நேர்த்தியானதே! அது எவ்வளவு பால் கறக்கும்? இதுபோன்ற ஒரு பசு வாங்க நான் வெகு காலமாக எண்ணிக்கொண்டிருக்கிறேன்—" என்றான்.

"நீர் குதிரையை எனக்குக் கொடுப்பீரானல் நான் பசுவை உமக்குத் தந்து விடுகிறேன்" என்றான் பசுக்காரன்.

"அப்படியா? மெத்த சந்தோஷம்" என உழவன் குதிரையி லிருந்து குதித்து, குதிரையை அவன் கையில் கொடுத்து, பசுவையும் பெற்று, சந்தையை நோக்கி நடந்தான்.

சிறிது தூரம் சென்றதும் ஒருவன் ஒரு ஆட்டை ஓட்டிக்கொண்டு போவதைப் பார்த்தான்.

"ஆ! ஆ!! அது எவ்வளவு நேர்த்தியான ஆடு! என் தோட்டத்தில் செடி கொடிகள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. பசுவுக்குப் புல்லும் வைக்கோலும் வேண்டும். வைக்கோல் என்னிடத்தில் இல்லை. இந்த ஆட்டை வாங்கிக்கொண்டால் தோட்டத்திலுள்ள செடி கொடிகளைத் தின்று அது தானே வளரும். நான் வைக்கோல் தேடி அலைய வேண்டியதும் வராது" என எண்ணி, ஆட்டுக்கார னண்டை சென்று "நமது பசுவையும் ஆட்டையும் கைம்மாறிக் கொள்ளலாமா?" என்று கேட்டான்.

ஆட்டுக்காரன் புன்னகையோடு "அப்படியே ஆகட்டும், இரட்டிச் சந்தோஷம்," என்று கூறி ஆட்டைக் கொடுத்துப் பசுவைப் பெற்றுக் கொண்டான்.

உழவன் பெரு மகிழ்ச்சியோடு ஆட்டை ஓட்டிக் கொண்டு சிறிது தூரம் செல்லவே ஒருவன் ஒரு வாத்துக் கொண்டு போவதைப் பார்த்தான்.

"என் பாக்கியமே பாக்கியம்! எப்படியாவது இந்த வாத்தை வாங்கிக்கொள்ள வேண்டும். வாத்து தினந்தோறும் முட்டையிடும், ஆடு முட்டை யிடுமா? வாத்து குளத்தில் நீந்தி விளையாடி மேய்ந்து தானே வரும். ஆட்டைக் கட்டவும் காக்கவும் யாரால் முடியும்?" என்றெண்ணி, "தம்பீ! என் ஆட்டை வாங்கிக்கொண்டு உமது வாத்தைக் கொடுப்பீரா? சீக்கிரம் சொல்லும்! சொல்லும்!!" என்று அவசரப் படுத்தினன்.

வாத்துக்காரன் உழவனை ஏற இறங்கப் பார்த்து, உழவன் முழுப் பைத்தியக்காரன் அல்லவெனத் தேறி—"சரி! அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி வாத்தைக் கொடுத்து ஆட்டை வாங்கிக் கொண்டான்.

இதற்குள்ளாக உழவன் பட்டண எல்லையை அடைந்தான். குதிரைகளையும், பசுக்களையும், ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு ஜனங்கள் திரள்திரளாய் வழி நெடுகச்சென்று கொண் டிருந்தார்கள். ஏழையான உழவன் ஜனத்திரள் நிறைந்த பாதையைவிட்டு நீங்கி வயல்கள் வழியாக நடந்தான்.

ஒரு வயல் வரப்பில் ஒரு கோழி மேய்ந்துகொண் டிருந்தது.

"அம்மம்மா! இது எவ்வளவு அழகான கோழி! என்ன பாடு பட்டாவது இதை வாங்கவேண்டும்." என உழவன் கூறி வாய்மூடு முன் கோழிக்காரன் அங்கே வந்தான்.

"இந்தக் கோழி உம்முடையது தானே? ஆனல் இந்த வாத்தைப் பெற்றுக்கொண்டு உம்முடைய கோழியைக் கொடுப்பீரா?" என்று கேட்டான் உழவன்.

"எனக்குப் பூரண சம்மதம்! என்றான் கோழிக் காரன். ஒரு பெரிய வாத்துக் கிடைக்கு மானல் ஒரு சிறு கோழியை யார்தான் கொடுக்க மாட்டார்கள்.? உழவன் வாத்தைக் கொடுத்துக் கோழியைப் பெற்றுக்கொண்டான்.

III

வெயிலோ அதிகம், பாதையும் புழுதி படிந்திருந்தது. ஆகவே உழவனுக்குப் பெருத்த தாக முண்டாயிற்று. உழவன் தாக சாந்தி செய்து கொள்வதற்காக ஒரு காப்பிக் கடைக்குள் புகுந்தான்.

உழவன் காப்பி குடித்துக்கொண் டிருக்கையில் ஒரு வன் ஒரு சாக்கு நிறைய எதையோ சுமந்துகொண்டு காப்பிக் கடைக்குள் வந்தான்.

உடனே—"அந்தச் சாக்கில் என்ன சாமான்?" என்றான் உழவன்.

"அழுகி யுலர்ந்த உருளைக் கிழங்குகள்" என்றான் வந்தவன்.

"அவைகளை என்ன செய்யப் போகிறீர்?" என்று கேட்டான் உழவன்.

"தூர எறியப் போகிறேன்" என்றான் வந்தவன்.

"வீணே எறியவேண்டாம். நான் அவைகளை வாங்கிக் கொள்கிறேன்" என்றான் உழவன்.

"பதிலாக எனக்கு என்ன தருவீர்?" எனக் கேட் டான் வந்தவன்.

"இந்தக் கோழியைத் தருவேன்" என்றான் உழவன்.

அப்படியே கோழியைக் கொடுத்து உருளைக் கிழங்கை வாங்கிக் கொண்டான்.

இத்தருணத்தில் வேறிரண்டு பிரயாணிகள் காப்பிக் கடைக்குள் வந்தனர். அவர்கள் இருவரும் பெரும் பணக் காரர்கள். ஒவ்வொருவ னிடத்திலும் பவுன் நிறைந்த ஒவ் வொரு பை இருந்தது.

"அந்தச் சாக்கில் என்ன இருக்கிறது?" என்று அவர்கள் உழவனைக் கேட்டார்கள்.

"அழுகி உலர்ந்த உருளைக் கிழங்குகள் இருக்கின்றன. நான் அவைகளை என் மனைவிக்குக் கொண்டு கொடுக்கப் போகிறேன்" என்று உழவன் விடைகூறி, குதிரை விற்பதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் உருளைக் கிழங்கு வாங்கினது வரையுள்ள வரலாறெல்லாம் சவிஸ்தாரமாகச் சொன்னான்.

"உம்முடைய வியாபாரத் திறமையை உமது மனைவி மெச்ச மாட்டாள். மாறாக, வாயில் வந்தபடி திட்டி உம்மை வீட்டைவிட்டு ஓட்டிவிடுவாள்" என்று பிரயாணிகளில் ஒருவன் கூறினான்.

"அவள் திட்டவும் மாட்டாள், ஓட்டவும் மாட்டாள். நான் அவளைத் திட்டும் வழக்கமு மில்லை. அவள் என்னைத் திட்டும் வழக்கமு மில்லை" என்று உழவன் உல்லாசமாக உரைத்தான்.

"வேண்டுமானால் நான் பந்தயம் வைக்கிறேன். ஒருகாலும் அவள் உம்மைத் திட்டாமல் இருக்கமாட்டாள்." எனப் பிரயாணி துடுக்காகக் கூறினான்.

"என்ன பந்தயம் வைப்பீர்?" என்றான் உழவன்.

"இந்தப் பவுன் பையைப் பந்தயம் வைப்பேன்" என்றான் பிரயாணி.

பந்தயம் ஒப்புக்கொள்ளப் பட்டது. உழவனும் பிரயாணிகளுடன் வீடுநோக்கிப் புறப்பட்டான்.

அவர்கள் உழவன் வீட்டை அடைந்தபொழுது உழவன் மனைவி தலைவாயிலில் நின்றாள்.

"அடியே! சுகந்தானா? விசேஷம் எதாவ துண்டா?" என்றான் உழவன்.

"சுகந்தான். விசேஷ மொன்று மில்லை. குதிரையை விற்றாய் விட்டதா?" என்றாள் மனைவி.

"ஓகோ! விற்றுய்விட்டது. குதிரையைக் கொடுத்து, இதோ பார், இந்த உருளைக் கிழங்குகளை வாங்கினேன்" எனக் கூறிச் சாக்கை அவிழ்த்துத் தலைகீழாகக் கொட்டினான்.

அழுகிய உருளைக் கிழங்குகளைப் பார்த்து அவள் ஆச்சரிய மடைந்தாளெனினும் கோபங் கொள்ளவில்லை.

"மெத்தச் சந்தோஷம், உமக்கு யுக்தமென்று தோன்றியதை நீர் செய்தீர். ஆகையால் எனக்கும் அது யுக்தமே," என்றாள் குணவதியான உழவன் மனைவி.

பின்னர் குதிரை விற்ற வரலாறு முழுதும் உழவன் விளக்கிக் கூறினான். மனைவி கோபங் கொள்ளவே இல்லை. வீட்டிலுள்ள உணவை மூவருக்கும் பரிமாறி உண்ணும்படி உபசரித்தாள்.

"நான் பந்தயத்தை இழந்துவிட்டேன்" என்று பிரயாணி கூறி, பவுன் பையை அவிழ்த்துத் தரையிற் கொட்டினான்.

உழவனும் மனைவியும் வியப் படைந்தனர்.

"உத்தம தம்பதிகளே! இந்தப் பவுன்களை நீங்கள் சந்தோஷமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மீத நாட்களையும் மகிழ்ச்சியுடன் கழியுங்கள். உங்களைப் போன்ற உத்தமர்களுக்கு உலகத்தின் துன்பமும் உண்டோ?" எனப் பிரயாணிகள் வியந்து கூறிச் சென்றனர்.

பிழை திருத்தம்.

☞ சென்ற மாதம் லக்ஷ்மியில் வெளியான 'தமிழர் வாழ்வு' என்ற வியாசத்தில் 'சுமத்ராத் தீவில் உள்ள மதுரை' என்பதை 'ஜாவாத்தீவில் உள்ள மதுரை' யென்று நேயர்கள் திருத்தி வாசிக்க வேண்டுகின்றோம்.

ஆரோக்கிய லக்ஷ்மியின் ஆலயம்

[ஸ்ரீமான் பி-ஸ்ரீ-ஆச்சார்யா]

"... மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக்
கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே"

என்று நமது தேச பக்த ஆசுகவி பாடுகின்றார். தெய்வத் தமிழ் நாடு தேவாலயங்களால் பொலிவுற்று விளங்குகின்றது. தமிழ் மன்னர்கள், தமிழ் மக்களது சமுதாய வாழ்க்கை பல துறைகளிலும் அழகு பெற்று அபிவிருத்தியடைந்து ஒளிரவேண்டுமென்று பல்கலை நிலையங்களாய்த் திகழும் பல பல கோயில்களை நாடெங்கும் நிர்மாணஞ் செய்து நிறுத்தினர். இத்தகைய கோயில்களை அந்நிய நாடுகளிலே — வட இந்தியாவிலும் பார்க்க முடியாது.

தேவாலயங்க ளெல்லாம் நமது சரீர அமைப்பைத் தழுவி அமைக்கப்பட்டன என்பர். ஏனென்றால் மக்கள் உடம்பே உண்மையான தேவாலயம் என்பது சிறந்தபேர் அறிஞர் கொள்கை. உலாவும் கோயிலான மனித சரீரத்தில் இறைவனைக் காணாதவர்கள் ஒரு கோயிலிலும் இறைவனைக் காணாத நாஸ்திகர்க ளாவர் என்பது திண்ணம்.

பூரண ஆரோக்கியம் பொலிந்து ஒளிரும் பொன்மேனி, ஆரோக்கிய லக்ஷ்மியின் அழகிய ஆலய மாகும். அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு என்கிறபடி, இவ் ஆலயம் சின்னஞ் சிறியதோர் உலகமாய்த் திகழ்கின்றது.

ஆலயத் திருப்பணி.

ஆரோக்கிய லக்ஷ்மி, இயற்கை அரசியின் தவப் பயனாய்த் தோன்றி இயற்கையின் செல்வமாகவே வளர்கின்றாள். ஆரோக்கிய ஸ்ரீயின் அருள்-ஒளி, ஆரோக்கிய ஸ்திரீ புருஷர்களின் உள்ளத்தில் ஒளிர்ந்து அவர்களது உடம்பின் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வோர் அணுவிலும் பரவுகின்றது.

ஆரோக்கிய லக்ஷ்மியை நம்பவேண்டும். அவளது ஆலயமாகிய உடம்பைப் பேணவேண்டும். உடம்பின் அழகையும் வலிமையையும் ஆரோக்கியத்தையும் பொன்போலப் போற்றுவது ஆரோக்கிய லக்ஷ்மியைப் போற்றுவ தாகும். வேண்டும்போது முயன்று, வேர்த்த போது நீராடி, பசித்தபோது உண்டு, களைத்தபோது இளைப்பாறி உடம்பைப் பாதுகாத்து இயற்கை நிலையில் வளர்ப்பது, ஆரோக்கிய லக்ஷ்மியின் ஆலயத் திருப்பணியாகவே கருதப்பட வேண்டும்.

ஆலயத்தின் மூல பொக்கிஷம்.

ஆரோக்கிய ஸ்ரீயின் அற்புத ஆலயமாகிய உடம்பின் அமைப்பையும் உறுப்புகளின் கடமைகளையும் ஒருவாறு உணர்ந்தொழுகுவது ஆரோக்கிய லக்ஷ்மியின் இன்னருள் பெற்றுய்ய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தாகும்.

இவ் வற்புத ஆலயத்தின் பணிகள் ஒழுங்காக இனிது நிறைவேறும் பொருட்டு, ஆச்சரியமான தோர் 'மத்தியப் பிரதேசம்' தேவையாகும். இப்பிரதேசம் யாது? சின்னஞ் சிறு உலகமான இவ் ஆலயத்தில் இப்பிரதேசமே தலை நகராய் விளங்குகின்றது. ஆங்கில மகாராஜ்யத்தின் தலை நகராகிய லண்டன் மாநகரம் உலகத்திலுள்ள தலைநகரங்களுக் கெல்லாம் தலை நகராய் விளங்குகின்ற தென்பர். லண்டனிலும் சிறந்ததோர் தலைநகரம், ஆரோக்கிய லக்ஷ்மியின் திவ்ய தேசமாகத் திகழும் நமது தேகத்தின் 'மத்தியப் பிரதேசமாக, அமைந்திருக்கின்றது. இது 'எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்கிறபடி விளங்கும் உத்தமாங்கமாகிய தலையே யாகும்.

இத் 'தலை நகரத்தில் அதிசயமானதோர் பொக்கிஷசாலை யிருக்கின்றது. உலகத்தில் பொக்கிஷமின்றி ஒரு வேலையும் நடைபெறுவதில்லை. 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை. இவ்வண்ணமே உயர்ந்த பொருளை உற்பத்தி செய்யும் ஓர் பொக்கிஷ சாலை நமது உடம்பாகிய சிறு உலகத்திலும் காணப்படுகின்றது. இதுவே மூளை. இம்மூளை விசேஷப் பாதுகாப்புடன் தலையில் அமைக்கப்பட் டிருக்கின்றது. இதுவே நமது மூல பண்டாரம்——ஆரோக்கிய ஆலயத்தின் அதிசயமான பொக்கிஷம்.

பொக்கிஷத்தின் பெருமை.

இத்தகைய 'பண்டார'த்தில் எத்தகைய பொருள் காணப்படுகின்றது? எண்ண எண்ணத் தொலையாத எண்ணங்கள் எல்லாம் மூளை என்னும் மூல பண்டாரத்தில் தோன்றும் நாணயங்களாம். இவை சரீர தர்மத்தைச் செம்மையாக நடத்துகின்றன. இயற்கையரசி நமக்கு அருளிய இப்பொக்கிஷத்தின் பெருமையை நாம் இன்னும் உள்ளவாறு உணர்ந்து கொள்ளவில்லை. மேற்புல முனிவர்களான விஞ்ஞான நூலாரும் மூளையின் நிலையையும் திறமையையும் முற்றும் உணர்ந்தவரல்லர். காவிய உலகத்தின் பேர் அரசர்களான கம்பரும் ஷேக்ஸ்பியரும் கூட இம் மூல பொக்கிஷத்தின் பெரும் பாகத்தை அனுபவிக்கவில்லை யென்றால், இப்பொழுது பரிணமநெறியிலே (Path of Evolution) நாம் நிற்கும் நிலையில் மூளையின் அபார சக்திகளின் அதி அற்ப பாகமே விகசித்து வருகின்ற தென்பது எளிதில் அங்கீகரிக்கப்படும்.

ஆரோக்கிய லக்ஷ்மியின் ஆலயம்

காப்பக நூலகம்
2/8333
600-008

விநோதமான தந்திக் கம்பிகள்.

மூளையை ஒரு பெரிய ‘தந்தி ஆபீஸாகவும் கூறலாம். மூளையிலிருந்து பிறக்கும் எண்ணங்களும் ஆணைகளும் சரீரத்தின் பிறபாகங்களுக்கு நரம்புகள் மூலமாய் அனுப்பப் படுகின்றன.’ இந் நரம்புகளே நமது தந்திக் கம்பிகளாகும். இவையே அங்கத்தின் பலவேறு உறுப்புக்களையும் மூளையோடு சேர்க்கின்றன. ஒவ்வொரு உறுப்பிலிருந்தும், உறுப்புக்களின் எண்ணிறந்த ஜாலங்களில் (Cells) நரம்பு மூலமாகவே வந்து கொண்டிருக்கிறது. நரம்புகள் என்னும் ஆச்சரியமான தந்திக்கம்பிகள், ஆரோக்கிய ஆலயத்தின் மூலஸ்தானமாகிய மூளைக்கும் மற்றப் பிரதேசங்களுக்கும் போக்குவரவிற்கு உரிய சாதனமாக, இயற்கை யென்னும் ஈச்வர சக்தியால், அமைக்கப்பட் டிருக்கின்றன. மூளையைப் போன்றதோர் அதிசயமான பொக்கிஷத்தையும், நரம்புகளைப் போன்ற ஆச்சரியமான தந்திக்கம்பிகளையும் உலகெங்கும் நாம் தேடித்தேடி யலைந்தாலும் பார்க்க மாட்டோம். ஆலயத்தின் பொறிகள் இனி, புற உலகத்திலிருந்துவரும் வர்த்தமானத்தைப் பதிவுசெய்யும் வண்ணம் ஐந்து பொறிகள் ஆரோக்கிய ஆலயத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. இவையாவன :—மெய் (அல்லது ஸ்பரிச நரம்புகள்), வாய் (ருசி இந்திரியங்கள்), கண், மூக்கு, செவி இவை நமது ‘ஆரோக்கிய ஆலயத்தைப்’ புற உலகத்தோடு ஐக்கியப்படுத்துகின்றன. இப்பொறிகளின் வாயிலாகவே விஞ்ஞான சாஸ்திரம் புற உலகத்தை வெல்ல முயல்கின்றது. இவ் ஐம்பொறிகளையும் மூளையோடு ஒற்றுமைப் படுத்துவன முன்குறித்த தந்திக்கம்பிகளே யாம்.

ஐம் பொறிகளையும் செம்மையாக வைத்துக்கொண்டால் ஒழிய நாம் வெளி யுலகத்தை அறிய மாட்டோம்; ஜயிப்பதும் முடியாது. ஐம்பொறிகளையும் வென்றால் ஒழிய ஆன்ம-சுய-ஆட்சி கைகூடாதென்பது ஆன்ம-அறிவு-நூலார் துணிவு. ஐம் பொறிகளையும் வென்று வசமாக்கி மலர்த்திப் பின் வெளி யுலகத்தை வெல்வதே வீர லக்ஷணம் என்றும், இயற்கை யென்னும் ஈச்வர சக்தியோடு ஒத்துழைத்து இங்ஙனம் புற உலகத்தை ஜயிக்கும் பொருட்டு ஐம்பொறிகள் தவிர வேறு பொறிகளையும் கருணை கூர்ந்து பரிணம விதி வழியே நமக்கு அளிக்க ஆரோக்கிய லட்சுமி காத்துக்கொண்டிருக்கின்றாள் என்றும் இரகசிய தத்துவ ஆராய்ச்சியாளர் (Occulists) கூறுகின்றனர்.

பரிணம ஏணி.

மக்கள் உடம்பை ‘உலாவும் கோயில்’ என்று சூட்சும ஞானம் அறிவிக்கின்றது. புல் பூண்டு முதலான தாவரங்களின் அனுபவத்திற்கு மேலாக, இச்சைக் கிணங்க இரைதேடித் திரியும் பிராணிகளின்

அனுபவமும், பிராணிகளின் அனுபவத்திற்கு மேலாகக் கருவிகளைக் கையாடும் மானிட அனுபவமும் பரிணாம ஏணியில் படிப்படியாக அமைந்திருக்கின்றன.

ஓரிடத்தில் பிறந்து அதே இடத்தில் வளர்ந்து அழியும் செடி கொடி மரங்களைப் பாருங்கள். இவற்றின் அநுபவத்திற்கும், 'கடிதோடும் கால் உள' என்பதைக் கண்டு கொண்ட பிராணி அனுபவத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்? மரங்கள், நினைத்த இடத்திற்குச் செல்ல முடியுமா? பிராணிகள், விரும்பிய இடத்திற்குச் செல்லும் படி, பரிணாம விதி வழியே தொங்கும் உறுப்புக்களான கால்கள் தோன்றின.

இன்னும் பிராணி-அனுபவத்திற்கும், "சில பூணும் கையுள" என்று கண்ட ஆதி-மனித-அனுபவத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்? நாற்கால்-பிராணி-யனுபவத்திற்கும் இரு-கை-மனித-அனுபவத்திற்கும் இடையே, கடக்க முடியாத அபிவிர்த்தி-வெள்ளம் பொங்கிப் பரந்து கிடக்கின்றது.

'கடிது ஓடும் காலுள' என்று கண்ட பிராணிகள் எத்தகைய இன்ப சுதந்தரத்தோடு துள்ளித் திரிகின்றன? 'சில பூணும் கையுள' என்று கண்டுகொண்ட ஆதிவேடர்களும் வில்லாளர்களும் எவ்வளவு குதூகலத்தோடு வேட்டையாடித் திரிந்து வேண்டுவன வற்றைத் தமக்கு அருகே சேகரித்துக்கொண்டனர்?

ஏணி-ஏற்றம்.

இயற்கையின் பரிணாமசக்தி, நமக்குத் தொங்கும் உறுப்புக்களான கை கால்களையும், இவற்றை இயக்கும் தசைகளையும், இவற்றை மூளையோடு ஐக்கியப்படுத்தும் அழகிய சிறு தந்திக்கம்பிகளை (Nerves)யும் கொடுத்திருப்பதால், ஒரு காலத்தில் விலங்குகளோடு விலங்குகளாய்த் திரிந்த நாம், வால்குறுகிக் கூன் நிமிர, 'மெய்வருத்திக் கை செய்து' மூளையைப் பெருக்கி மக்களாகப் பரிணமித்திருக்கிறோம். பல வேறு கருவிகளையும் சாதனங்களையும் கையாடியே மனிதன் மனிதனாய் விளங்குகின்றான். பரிணாம ஏணியில் விலங்கினத்திற்கு மேற்படியில் ஏறி நிற்கின்றான்.

ஆலயத்தின் அமைப்பு.

ஆலயத்தின் கோபுரமாக விளங்குவது உத்தமாங்கமாகிய சிரம்; ஆலயத்தின் சிரோரத்தினமாய் மூல பொக்கிஷமாய் விளங்குவது மூளை. மூலஸ்தானத்திற்கும் ஆலயத்தின் ஐம் பொறிகளுக்கும் எல்லா வுறுப்புக்களுக்கும், ஆணைகளும் அறிக்கைகளும் எண்ணங்களும் விருப்பங்களும் நரம்புத் தந்தி மூலமாகப் போவதும் வருவதுமா யிருக்கின்றன. மூளையாகிய மூலஸ்தானத்திலிருந்து அறிவுத்

தெய்வம் அரசு செய்கின்றது. பகுத்தறிவே மற்றப் பிராணிகளிலிருந்து மனிதனை வித்தியாசப் படுத்துகின்றது. பகுத்தறிவின் பயனாகவே மனிதன் பிராணி வர்க்கத்தின் முடிமணியாய் விளங்குகின்றான். உடம்பெல்லாம் மூளையாய் அறிவுமயமாய் விளங்குவோன் மனிதன் என்று புதிய உள்ள நூலாரும் பழைய யோகியரும் கூறுகின்றனர். மேலும் நமது ஆரோக்கிய ஆலயம் உறுதியாக நிற்பதற்கு இன்றியமையாத தோர் எலும்புக் கூட்டையும், இவ் ஆலயத்தின் பல வேறு பாகங்களையும் பழுதுபார்க்கவும் புதுப்பிக்கவும் வேண்டுவன வற்றைக் கொண்டுபோகவும் ஜீவ கங்கையாகிய இரத்தம் சுற்றிப் பாயவும் இரத்தப் பை, இரத்தக் குழாய்-நாளங்களையும் ஆலயம் சுத்தமா யிருக்கும்படி மலங்களைச் சுட்டு நீக்குவதற்கு உரிய சுடுகாடாகிய சுவாசப் பையையும், ஆலயத்தின் பௌதிக கர்மசாலையாகிய வயிறு முதலியவற்றையும், எங்கும் நிறைந்த-எல்லாம்வல்ல-இறைவனது அருட் சத்தியாகிய இயற்கை நமக்கு அளித் திருக்கின்றது.

இயற்கையின் அருட்சக்தி எப்பொழுதும் ஆரோக்கியத்தையே நாடுகின்றது. ஆரோக்கியக்குறை பிணி ரூபமாக எச்சரிக்கின்றது. ஆரோக்கிய லக்ஷ்மியின் ஆலயமாக உடம்பைக் கருதி, ஆரோக்கிய லக்ஷ்மியின் நல் அருளை எப்பொழுதும் உறுதியாக நம்பி, இவ் அற்புத ஆலயத்தின் அற்புத அமைப்பை ஆராய்ந்து சிந்தித்துத் தெளிந்து இயற்கை நெறியே செல்வோர் நீண்டகாலம் நோயற்ற வாழ்வு வாழ்ந்து இன்புறுவர்.

பழங்களே சிறந்த ஆகாரம்

நீங்கள் உங்களுடைய ஆகாரத்தைப்பற்றி ஒழிந்த நேரங்களில் யோசித்துப் பார்ப்பீர்களேயாகில் அதன் பெருமையைப்பற்றி ஒரு வாரத்திற்குள் தெரிந்து கொள்ள முடியும். நீங்கள் ஒரு வருஷம் புத்தகங்களைப் படித்து ஆகாரத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளுவதை விட இந்த ஒரு வார காலத்திற்குள் அதிகமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

ரொட்டி, வெண்ணெய், கோதுமை, அரிசி, வெங்காயம் முதலிய சாமான்கள் மாமிசத்தைக் காட்டிலும் தேகத்திற்கு பலத்தை உண்டு பண்ணு கின்றவைகளாக இருக்கின்றன வென்று நான் முதலில் நன்கு தெரிந்து கொண்டேன். மாமிசத்தைவிட இவை பசியைத் தணிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. பிறகு நான் பழங்களைச் சாப்பிட ஆரம்பித்தேன். அந்தப் பழங்களை உட்கொள்ளுவதின் பெருமைதான் என்ன! பழங்களைச் சாப்பிடுவதன் பயனுக எனது தேகம் நாளுக்குநாள் பல மடைந்து வந்தது. எனது தேகத்தின் நரம்புகள் நாளுக்கு நாள் பல மடைந்து வந்தன. எனக்கு முன்பு இருந்த தலைவலி அடியோடு ஒழிந்துவிட்டது. பழங்களைச் சாப்பிடுவதற்கு முன்பு நான் மிகவும் மந்த முள்ளவனுக இருந்தேன். பழங்களைச் சாப்பிட்டு வந்ததினுல் எனக்குச் சக்தியும் உற்சாகமும் நாளுக்குநாள் அதிகமாகி வந்தன.

அதிலிருந்து நான் மற்ற ஆகாரங்களை நிறுத்திப் பழங்களையே வழக்கமாகச் சாப்பிடுவதற்கு ஆரம்பித்தேன். இதைப்பற்றி நான் மற்றவர்களோடு அடிக்கடி வாதிப்பதுமுண்டு. அவர்கள் மாமிசம் சாப்பிடுவதை விட்டுவிட முடியாதென்று அடிக்கடி என்னிடத்தில் கூறியிருக்கிருர்கள். இதைப்பற்றி நான் எனது வைத்திய கலாசாலை ஆசிரிய ரிடத்திலும் வாதித்தேன். சரீரப் பிரயாசையினுல் ஜீவிக்கின்றவர்கள், தான்யங்களையும், காய்கறிகளையும், பழங்களையும் சாப்பிட்டுக்கொண்டு வரலாம். ஆனுல் மூளையை உபயோகித்து வேலை செய்கிறவர்கள் மாமிசம் சாப்பிடாம லிருக்க முடியாதென்று அவர் என்னிடத்தில் கூறினுர். அவர் கூறியது சரியான தல்ல.

உலகத்திலுள்ள ஜனங்கள் பல விதமான நிலைமைகளில் இருந்து வருகிருர்கள். மனிதன் வியாதி யில்லாமல் தேக ஆரோக்கியத்துடன் எப்படி யிருக்க முடியும்? வியாதியினுல் பீடிக்கப்பட்டவர்கள் எப்படிக் குண மடைய முடியும்? மனிதன் தனது ஆயுள் காலத்தை எப்படி விருத்தி செய்து கொள்ள முடியும்? என்று பலர் பல கேள்விகளைக் கேட்கலாம். மனிதர்கள், மீன், கோழி, மாமிசம் முதலிவைகளைச் சாப்பிடாமல் சிறந்த பழங்களையே சாப்பிட்டு வருவார்க

ளானல் அவர்களுக்கு தேக ஆரோக்கிய முண்டாகும். வியாதி என்பதும் அவர்களை அணுகாது. அவர்கள் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் இருக்கலாம். அவர்களுடைய ஆயுள் நாளுக்கு நாள் விருத்தியாகும்.

ரத்தமே வாழ்க்கைக்கு ஆதாரம்.

நமது முன்னோர்கள் கண்டுபிடித்தவைகளைக் காட்டிலும் இப்பொழுது உள்ளவர்கள் புதிதாக ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை.

“ஒருவன் ஆப்பிள் பழம் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் அவன் டாக்டரிடத்தில் செல்ல வேண்டியதே யில்லை. கீரைகளைச் சாப்பிட்டு வந்தால் கவலை யென்பதே ஏற்படாது” என்று பெரியோர்கள் கூறுவது வழக்கம்.

பழங்களின் ரசத்தையும், காய்கனிகளையும், கீரைகளையும் பெரியோர்கள் ரத்த சுத்திசெய்யும் வஸ்துக்கள் என்று கூறுவது வழக்கம். விரை சம்பந்தமான வியாதிகளைக் கண்டிப்பதில் ஆப்பிள்ப் பழத்திற்குச் சமமாக ஒன்றுமே யில்லை. எலுமிச்சை, ஆரஞ்சுப் பழங்கள் இன்புளுயன்சா முதலிய ஜுரங்களை நிவர்த்தி செய்யக்கூடிய சக்தியுள்ளவைகளாக இருக்கின்றன. திராட்சைப் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் தேகத்தில் எப்பொழுதும் பலம் இருந்துகொண்டே யிருக்கும். தேகத்தின் இளமையும் காந்தியும் மாறு. கீரைகளையும் காய்கறிகளையும் சாப்பிட்டு வந்தால் தேகத்தில் யாதொரு வியாதியும் ஏற்படாது. மனிதர்கள் மாமிசம் சாப்பிடுவதை அறவே ஒழித்து அவர்கள் முன்னோர்கள் உட்கொண்ட பழங்கள், தானியங்கள், கொட்டைகள், காய்கறிகள், கீரைகள், பால், வெண்ணெய், தேன் முதலியவைகளைச் சாப்பிட்டு வருவார்களானல் அவர்கள் நீண்ட ஆயுளுடையவர்களாகவும், தேக ஆரோக்கிய முள்ளவர்களாகவும் இருக்க முடியும். இதில் சந்தேகம் சிறிதும் வேண்டாம்.—“டெயிலி ஹெரால்டு” பத்திரிகையில் ஆங்கில வைத்தியர் எழுதுகிறார்.

உழைப்பும் ஓய்வும்

யாவும் படைத்துக் காத்து அழித்து அளிக்குந் திறமுடையோனான முதல்வன், பகல் என்றும் இரவு என்றும் ஒரு தினத்தைப் பாகுபாடு செய்து, பகற் காலத்தில் பரிதியின் வெளிச்சமும், கங்குற் பொழுதில் மதி, மீனம் இவற்றின் ஒளியும் நமக்கு அருளி யிருக்கின்றனன். இவ்வாறு ஒரு நாளைக் கூறுபடுத்திய தினின்றுமே பாகுபாடான காலங்களின் தன்மைக்கேற்பவே அவ்வக் காலத்தினில் இயற்றுந் தொழில்களும் இருக்கவேண்டு மென்பது பெறப் படும். பகற் காலம், குட்சிபாதையை நிவர்த்திக்கும் நிமித்தம் சகல ஜீவப் பிராணிகளும் உழைத்துப் பாடுபட வேண்டிய பொழுதாம். அவ்வாறே அதற்கு நேர் மாறான இராக்காலம் உழைத்து அயர்ந்துபோன ஜீவவர்க்கங்கள் யாவும் இளைப்பாறவேண்டிய அமையமாம். உழைப்புக்கேற்ற சிரம பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுவது எவருக்கும் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். அஃதே இயற்கையின் திட்டமும். செய்து கொள்ளவேண்டிய இச்சிரம பரிகாரம் அனந்தல் வழியானே எய்தத் தக்கது. ஆகவே உறக்கத்துக் குரிய காலம் இராப் பொழுதே என்பது தெள்ளிதின் விளங்கும். இவ் விராக் காலத்தில் சகல ஜீவர்களும் தத்தம் களைப்பு நீங்க யாதொரு வினைசெயலும் இன்றி யிருத்தல் பிரத்தியட்சம். ஆனால், வன விலங்குகளில் சிங்கம், புலி முதலியனவும், புட்களில் கூகை முதலியனவும் இவ்விதிக்குப் புறம்பான ஒழுக்கமுடையனவாய் இலங்குகின்றன. மாந்தரிலும், சோரர், காவலாளர் இன்னோரும் இதற்கு மாறான நடத்தை யுள்ளோராய் இருக்கின்றனர். இன்னோரன்ன ஜீவ வர்க்கங்கள் பகல் முற்றும் களைப்பாறி இரவினில் தத்தம் தொழில்களை மேற்கொள்ள வேண்டியவையா யிருக்கின்றன. ஆகவே, உறக்கம் என்பது எவ்வகை ஜீவராசிகளாலும் மேற்கொள்ளப்பட்ட இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும். துஞ்சலாம் ஜீவ வர்க்கங்கள் எவையுமே துயில் மேற்கொள்ள வேண்டுவது அத்யாவசியம் என்பதும், நித்திரை செய்வதற்கு உரிய காலம் பெரும்பான்மையான ஜீவன்களுக்கு இராக்காலம் என்பதும் இதுகாறும் கூறிப் போந்ததினின்றும் பெற்றோம். இனி, முக்கியமாய் மாந்தரைப் பற்றிய மட்டில் வரைவோம்.

ஏற்கனவே கூறிப் போந்தபடி, உறக்கத்துக்கு உரிய காலம் இரவே. "உறங்குவது இராவொழியப் பகலுறக்கம் செய்யோம்" என்றார் தேரையரும். பகற்காலத்தில் உழைப்புப் பற்றிச் சோர்ந்து போன சரீரம் இரவில் துயின்று எழுதலால், மறுநாள் உழைப்புக்குப் பயன் படுகின்றது. நித்திரை அவசியம் என்பது பற்றிப் பகல் உறக்கம் செய்யக்கூடாது. ஏனெனில் இயற்கையின் திட்டத்திற்குப் புறம்பாகப் பகலில் கண் வளர்வது நோய்க் கிடம். "பகல் வளரார்

நோயின்மை வேண்டுபவர்.'' பகற் காலத்தில் தூங்குவோன் பரம் பொருளின் திட்டத்தையே மறுப்போனாய்ப் பல விதங்களிலும் இடுக்கண் உறுகின்றான். அன்றியும், பகற்பொழுதில் துயில்வோன் எப்பொழுதும் சோம்பல் குணமே மேற்கொள்ளப் பட்டவனா யிருப்பான். அவனை மூதேவி தான் வதியும் இல்லாகக் கொள்வள் என ஆன்றோர் கழறினர். இனி, இராக்காலம் பள்ளி கொள்ளுதற்கு ஏற்ற காலமே யெனினும் அதனினும் சிற்சில விதிகளைக் கடைப் பிடித்து ஒழுகல் அவசியம். மாலைக் காலம் உற்றதும் உறங்குவதும், பகலவன் குணதிசை எய்தியதும் எழுதலும் கூடாவாம். ஏனெனில், அதிகமாகத் துயிலல் சோம்பல், மற்றும் அதன்வழி நோய் பல— இவற்றிற்குக் காரணமாகும். "அனந்தல் ஆடேல்'' என்பது ஔவை வாக்கு. உறக்கமே, உழைத்துப் பழுதுற்றும், அயர்ச்சி மிகுத்தும், வாடித்தளர்ந்தும் போன உடலைச் சீராக்கித் தரும் கருவியாயினும், அதனிலும் ஓர் அளவைக் கடைப் பிடிக்க வேண்டுவது முக்கியம். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சா மன்றோ ?''

இரவு ஐந்து நாழிகைக்குள் (எட்டு மணிக்குள்) உண்டி கொள்ள வேண்டியது அவசியம். இராப் போஜனம் எளிதில் ஜீரணிக்கக் கூடிய பதார்த்தங்கள் அடங்கியதாயும், சிறிதளவு குறைந்தும் இருக்கவேண்டும். பகற் காலத்தில் சூரிய கிரண வெப்பம் பற்றி இரத்தவோட்டம் தடைபெறு திருக்கு மாதலின், தேகத்திலுள்ள எல்லாவிதக் கருவிகளும் தத்தம் தொழிலைச் சுறுசுறுப்புடன் இலகுவில் செய்து முடிக்கும் ஆற்றலுடையன. ஆகவே ஜீரண சக்தி அப்பொழுது அதிகரித்திருக்கும். ஆனால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி மிகும் இராக் காலத்திலோ இரத்த வோட்டம் குறைதல் பற்றி, ஜீரண சக்தியும் மிகுதியும் குறையும். இதுபற்றியே, குறைத்தே உண்ணவேண்டு மென்றது. உண்டி கொண்டதும் படுக்கப்போவது மிகவும் கெட்ட பழக்கம். இப்படிச் செய்தல் அஜீர்ணாதி ரோகங்களுக்குக் காரண மாகின்றது. ஆகவே இரவு உணவு உட்கொண்டதும் ஒவ்வொருவரும் குறு நடை கொள்ள வேண்டுவது இன்றி யமையாததாம். பின்பு மாணவர்கள் தத்தம் பாடங்களைக்கண்ணுறுவதிலும், முதியோர் பகவத் கதைகளைச் செவி யுறுதலிலும் தத்தம் காலத்தைச் சிறிதுநேரம் செலவிடல் வேண்டும். இரவு பத்து மணிப் பொழுதே உறக்கத்துக் கேற்ற காலமாம். இனி, படுக்கப் போகையில் கவனித் தொழுகவேண்டிய முக்கியமான வினை யொன்று உண்டு. அஃது யாதெனின் :—சாதாரணமாய் இராக்காலத்திற்றான் மனம் ஒரு நிலைப் பட்டிருக்கும். பகற்காலத்தில் லயப்படாத அம் மனம் அப்பொழுது நம் வசமாகக் கூடியவாறு ஒடுங்கித் தன் வலி யிழந்திருக்கும். அம்மனதை, நாம் உறங்கப் போகுங் காலத்தில் எல்லாம் வல்ல கடவுளின் தாளிணையில் நாட்ட வேண்டும். தூங்கப் போகையில் மனதில் கவலை என்பது எள்ளள வேனும் இராதவாறு செய்ய முற்படவேண்டும். ஏனெனில் கவலை நித்திரைக்கு விரோதியாம். எப்பொழுதும் ஏதாவது ஒன்றினைப்பற்றி

நிற்கும் இயல்புடைய மனதை, இராக் காலத்தில் நிஷ்களங்கமாய் விளங்கும் அம் மனதைத் தம் இஷ்ட தெய்வத்தின்பால் துஞ்சப் புகுங்கால் சேர்த்தலே மேதையோர் மேற்கொண் டொழுகுவதாம். பகலின்கண் புரிந்த தீவினைகளுக்காகத் தன்னை மன்னித்துத் தான் இனியும் அவ்வாறு செய்யா தொழியும் வண்ணம் தன்னருள் சுரக்கு மாறு அவ் விறைவனை மனதால் போற்றிப் பரவ வேண்டும். இவ் வாறு விமலன்பால் மனதைச் சேர்ப்பதால் விளையும் நன்மைகள் எண்ணில. அவற்றுள் முக்கியமாய் அனுபவத்தில் கண்டறியக் கூடியது விபரீதமான கனவு காண்டல் இன்மையே. கனாக் காணல் ஒழிதலால் சுகமான நித்திரை சரீரத்தைப் பிணிக்கின்றது. இனி, உறங்கி எழும்போதும் தன் வழிபடு கடவுள்பால் நாட்டப்பட்ட விதமே மனம் திகழு மாதலின் இத்தகைய ஒழுக்கத்தை எவரும் மேற்கொள்ளல் வேண்டும். நித்திரையானது அவரவர் தேகக் கூறுபாட்டினுக்கே இயையுமெனினும், சராசரி ஏழு மணி நேரமே தூக்கத்தின்கண் செலவிடப்படல் வேண்டும். ஆகவே வைகறைத் துயில் எழவேண்டுவது பெற்றும். விடியற்காலையில் 5-மணி சுமா ருக்கு எவரும் எழுதல் வேண்டும். எழுந்ததும் சிறிதுநேரம் தம் இஷ்ட தெய்வத்தைப் போற்றித் துதித்த பின்புதான் காலைக் கடன் களைச் செய்ய முற்பட வேண்டும். விடியற்காலையில் துயில் நீத்த தம் மனம் களங்கமற் றிருக்கு மாதலின் மாணவர் தத்தம் பாடங் களைப் படிப்பதில் அக்காலை தம் கவனத்தைச் செலுத்துவராயின் யாவும் மனதிற்படிய இன்புறுவர். அந்தணாத்தமர் இக் காலத்தை வேதாத்யயனத்தில் செலவிடுவர். அன்றியும், விடியற்காலமே தேகாப்பியாசத்திற்கும் சிறந்த காலம். ஆகவே யாவரும் தேகாப் பியாசம் செய்யின் நல முறலாம். தேகாப்பியாசம் செய்யா விடின், சில மைல்கள் தூரம் நடப்பதால் எய்தக்கூடிய அளவிறந்த நன்மை வரையற் பாலதன்று. அவரவர் அனுபவத்தில் அறியத் தக்கதே. "வைகறைத் துயிலெழு" என்பது பெரியோர் கட்டளை யாவதன்றி, அஃதே கடவுளின் ஆணையும் ஆகும் என்பதைக் கோழி, காகம் முதலிய பறவைகள் அக்காலையில் நம்மைக் கூவி எழுப்புவத னால் அறிக. விடியற் காலத்தில் படுக்கையை விட்டு எழ மனமில்லா தோர் எய்தும் கேடுகள் பல. வேலைகளைச் சுறுசுறுப்பாய்ச் செய்தற் குரிய அருமையான காலம் வீணே கழிந்தொழிவதுந் தவிர, மல மூத்ராதிகள் பிரியவேண்டிய சமயமான அக்காலத்தில் படுத் துறங்குவதால், அவைகளுந் தடைப்பட்டுப் பல கொடிய நோய்களை யும் அடைய வேண்டியது நேரிடுகின்றது. விடியற்காலத்திற் கண் விழித்துச் செய்யவேண்டிய கருமங்களைக்குறித்து,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என ஆன்ஞோர் வகுத்தருளினர். மற்றும் நித்திரை சரிவரப பிடிக்காது அலக்கண் எய்துவோரும் அதிகாலே விழித்தெழும் வழக்கத்தை மேற்கொள்ளின் சுகமான அனந்தல் பெற் றின்புறுவர். அன்றி, சாராயம், பூரணதிலேகியம் இவற்றை உண்டு செயற்கை நித்திரையை வருவித்துக் கொள்ளுவோர் கட்டாயம் பெரிதுந் துன்புறுவர். எவ்விடத்தும், எக்காலத்தும் இயற்கையான கண்படலே நன்மை பயப்பதாம் என்பதை எவரும் செவ்விதின் உணரவேண்டும். "பொழுதொடு படுத்துறங்கிப் பொழுதொடு எழுவதால் ஆரோக்கியமும், ஐசுவரியமும், மனத்தெளிவும் உண்டாகும்" என்றது ஓர் ஆங்கிலப் பழமொழி. அன்றியும் இம்முறை அனந்த லாடலால் பகற் காலத்தில் தொழில் செய் திளேத்த கருவிகள் யாவும் தத்தம் களேயொழிந்து சுகமுறுவதுந் தவிர, புலன்வழிச் சென்று அலேபட்ட மனமும், சரீரமும் செம்மையை அடைகின்றது. நம் மருத்துவ நூலும்,

"சித்த மயக்கஞ் செறியைம் புலத்தயக்க
மெய்த்த லுறக்கமந்த மென்பவைக—ணித்தமுற
வண்டுஞ் சிலரைநா யாய்ப்பன்னேய் கவ்வுமிராக்
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்"

என்று நித்திரை புரிவ தொழிதலால் நேருங் குற்றமும்,

"ஐந்திந் திரிய வசவுக் கியமகலும்
நைந்தமனத் துச்சாக நண்ணுங்காண்—பைந்தொடியே
மேனீட்டும் ஆயுளுறு மெய்யி னயர்வொழியுங்
கானீட்டிப் பள்ளி கொள்ளுங் கால்"

என நித்திரை செய்தலால் நேரும் இன்பமும்,

"புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
சுத்த நரம்பினற் றூய்மையுறும்—பித்தொழியுந்
தாலவழி வாதபித்தம் தத்தநிலே மன்னுமதி
காலேவிழிப் பின்குணத்தைக் காண்"

என்று காலேயில் எழுந்திருப்பதனுல் விளேயும் நன்மைகளுங் கூறிப் போந்தது.

"அடி வருடிப் பின்றூங்கி முன்னெழும் பேதையே" என்ற நாயனுர் வாக்கினின்றும் மகளிர்க் காவன அறிக.

இனி, பள்ளிகொள்ளப் புகுங்கால் கவனித் தொழுகவேண்டிய முக்கியமான சிற்சில விதிகளேக் கூறி நிறுத்துவோம். ஏற்கனவே கூறியபடி, வயிறு நிறைய உண்ட பின்பாவது, அல்லது உண்டி கொண்ட உடனேயாவது, கவலேகொண்ட நெஞ்சத்துடனுவது துஞ்சப் புகுதல் ஏற்புடைத்தன்று. ஒன்றும் உண்ணுமல்

பட்டினியாய் உறங்கப் புகுவதும் வெறுக்கற்பாலதே. ஏனெனில் அமைதியின்மை மிகுதலால் பல கொடிய கனவுகள் ஏற்பட்டு இன்பமயமான தூக்கத்திற்குப் பெரும் பங்க மிழைக்கும். நித்திரை செய்யுமுன் கைகால்களை நன்றாய்க் கழுவிக்கொள்ளல் வேண்டும். ஏனெனில் பகற்காலத்தில் அலைந்து திரிவதற்குச் சாதகமாயிருந்த கால்களில் புழுதி படிதலின் வியர்வை வெளிப்படுவதில்லை. இராக்காலத்திலேயே அத்துர்நீர் வெளிப்படவேண்டும். கால்களில் புழுதி படிந்த வண்ணமிருப்பின் அஃது அகலாது கீல்வாதம், குதிப்படுவன், பித்துவெடி முதலியவற்றை உண்டாக்குமாதலின் அஃது இம்முறையில் அகற்றப்படவேண்டும். கைகளும் இவ்வாறே. அன்றியும் ஈரம் புலர்ந்த பின் சிறிது ஆமணக்கெண்ணெயை உள்ளங்காலில் தேய்த்துத் தடவுதலால் கண்களுக்குக் குளிர்ச்சி விளைவது அனுபவம். கைகால்களை இவ்வாறு கழுவிக்கொள்ளுதல் சுகமான தூக்கம் பெறுவதற்குரிய வழிகளுள் ஒன்றாகும். இன்னும், தரையின் பேரில் யாதொரு விரிப்பு இன்றியும், தனிப்பலகைகளின் மீதும் சயனிக்கக் கூடாது. பூமியின்பேரில் படுப்பதால், கனமாதல் பற்றிப் பூமியின் பேரில் படிந்துகிடக்கும் விஷவாயுவைச் சுவாசிக்க நேரிடுவதன்றி, விஷஜந்துக்களின் துன்பமும் நேரிடும். மரப்பலகைகளில் முக்கியமாய், அத்தி, அரசு, ஆல், இச்சி, நாவல் இவற்றுள் பல தோஷங்களும் அடங்கியுள்ளனவாதலால், இவையொழிந்த ஏனைய மரப்பலகைகளாலான கட்டில், விசிப்பலகை முதலிய உயரமான இடங்களில் படுக்கவேண்டும். மேன்மாடி சாலச் சிறந்ததாம். இவற்றின் பேரில் பஞ்சு, புல், பட்டு, தோல், மூங்கில், பிரம்பு, தேங்காய் நார்க்கயிறு இவற்றுள் ஒன்றினாலாகிய அமளியில் துயில் கொள்ளுவது மிகுதியும் நன்மை பயக்கும். மேற்கூறிய ஒவ்வொன்றும் பலதிறப்பட்ட விசேஷ குணங்களை உடையது. சாதாரணமாய்ப் பஞ்சிட்ட மெத்தையே சாலச் சிறந்ததும் போதியதுமாம். இவ்வகை மஞ்சங்களில் படுக்க இயலாதோர் கோரை முதலியவற்றாலான படுக்கைகளிற் படுப்பதே மேல். படுக்குமிடம் தாராளமான காற்றோட்டம் உள்ளதாகவே இருக்கவேண்டும். காற்றோட்டம் இல்லாவிடங்களில் படுப்பதால் விளையுந் தீங்குகள் அனந்தம். அதற்காகக் காற்று அதிகமாகவுள்ள இடமுங் கூடாது. அன்றியும் மேற்கூரையில்லா வெளியிடம் படுத்துக்கொள்ளற்கு அருகமானதன்று. இவ்விடங்களில் உறங்குவதால், சீதளம் கடுஞ்சுரம் முதலியவற்றால் பீடிக்கப்படுவது அனுபவம். கொசு, மூட்டைப்பூச்சிகள் முதலியன நிறைந்துள்ள தலங்களிலும் அனந்தலாடல் கூடாது. அப்படிப் படுப்பின் அவை காரணமாக நமக்குப் பரவும் நோய்கள் பல. கொசுக்கடியினின்றும் விடுவித்துக்கொள்ளக் கொசு வலையினுள் உறங்குவதே சிறந்ததாம். மூட்டைப் பூச்சியின் உபத்திரவம் நீங்கவேண்டுமெனின், அவை அடைந்துள்ள அமளிகளைக் கடும் வெய்யிற் பரப்புவதாலோ, கொதிக்கும் உலைநீரைக்கொண்டு அவைகளை நனைப்பதாலோ, அன்றி அவை வதியும் ஒட்டைகளில் தீயிடுதலாலோ போக்கிக்

கொள்ளலாம். இவ்வாறு செய்யின் அது பாவச்செயலல்லவோ என நினைப்போர்கள் அதனு லெய்தக்கூடிய பலன்களை அனுபவிப்போரே யாவர். பலருடன் ஓர் அறையில் சேர்ந்து படுத்தலாவது, ஒருவர் உபயோகித்த படுக்கையில் தூங்குதலாவது கூடா. யாதொரு நோயு மின்றித் திடகாத்திரரா யிருப்போரே இதைக் கருத்தில் அமைக்க வேண்டுமெனின் அபஸ்மாரம், சுரம், குஷ்டம், காசம் முதலிய கொடிய நோய்களை யுடையோர் அருகில் படுப்போர் எவ்வளவு முன் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டுவது அவசியம்? இவ்விஷயங்களிற் சிறிதுங் கவனம் வையாமையால் தமக்குத் தாமே நோயுற்றுப் பின்பு தெய்வத்தை நொந்துகொள்ளுவோர்களின் மதியினந்தான் என்னே! "வினை விதைத்தவன் வினை யறுப்பதும், தினைவிதைத்த வன் தினை யறுப்பதும் உண்மையே யன்றோ?" மற்றும், பள்ளிசெய் கையில் நிர்வாணத்தோடாவது, ஈர வஸ்திரத்துடனுவது இருத்தல் முற்றிலும் விலக்கற்பாலவாம். நிர்வாணத்தோடு துயில்வோனைக் காணும் எவரும் அவனை அறவே வெறுப்பதோடு அவன் சவத் திற் குச் சமமாகவே கருதப்படுகின்றுன். ஈர ஆடை தரித்த வண் ணம் துஞ்சலால் விளையுந் தீமைகள் எண்ணில. இனி, படுக்கையில் கிழக்கேனும், தெற்கேனுந் தலைவைத்துக் கண்வளர்தல் வேண்டும். கிழக்கில் தலைவைத்துப் படுப்பதால் ஆயுள், ஆரோக்கிய விருத்தியும், தெற்கில் சிரசை வைத்துத் துயில்வதால் பெருஞ்சம்பத்தும உண் டாம் எனவும் மேலோர் கூறுவர். மேற்குத் திக்கில் தலைவைத்துச் சயனிப்பது மத்திபமே யாகும். ஒரு சாரார், தன்னூரில் கிழக்கிலும், வழிப்பிரயாணத்தில் மேற்கிலும், வேட்டகத்தில் தெற்கிலும் தலை வைத்துப் படுக்கலாமெனவும், 'வாழாது வாழ்ந்தாலும் வடக்கில் தலைவைத்துப் படுக்கலாகாது' எனவும் பகர்வர். ஆகவே, யாவரா லும் வடக்குத் திசை விலக்கப்பட்டது. வடக்குத் திக்கில் தலைவைத் துப்படுப்பின் வியாதியுண்டாமென்றும், வடதிசையிலிருந்து தென் திசை நோக்கி வேகமாயச்செல்லும் பூமியின் பெருஞ்சக்தி மூளையின ஆற்றலை அபகரிக்கும் எனவுங் கழறுவர் மேதையோர். படுத்துக் கொள்ளுங்கால் மற்றும் கவனிக்க வேண்டுவதாவது, இடதுபுறம் கீழே யிருக்குமாறு படுத்த லவசியம் என்பதே. மல்லாந்த வண்ண மேனும், குப்புறக்கவிழந்த விதமாவது படுத்தல் கூடாவாம. இடது புறம் கீழிருக்குமாறு படுததலால் அஜீர்ணுதி ரோகங்கள் ஏற்படா தொழிகின்றன. ஏனெனில் பித்தாசயம் மேலேயும் ஆமாசயம் கீழே யும் இருப்பதால் உண்ட உணவு சொற்ப காலத்திற்குள் ஜீரணமா கின்றது. அன்றியும், இலவம் பஞ்சிட்டுத் தைத்ததும் வேண்டுமளவு நீளமுள்ளதும், சரியான உயர முடையதுமான தலையணையில் மேற் கூறிய விதம படுத்துத் தலைவைத்துக் கண்வளரின் ஆகத்துள்ள நரம்புகள் யாவும் கோணுது நேரான நிலைமையில் நிற்பதுடன், தலை யைப் பற்றிய நோய்கள் பலவும் நீங்கும் என்பது வைத்ய விதி. பனி காலங்களில் யாவரும் கம்பளிப்போர்வையினுல் தங்கள் உடலை முற் றும் போர்த்திய வண்ணம் உள்ளிடங்களில் படுக்கவேண்டும். எக்

காலத்தும், முகத்தைப் போர்வைகொண்டு மூடிப் படுக்கக்கூடாது. உஷ்ண நிமித்தம் பக்கத்தில் கணப்புச்சட்டி முதலியன வைத்துக் கொண்டு புகைநிறைந்த இடங்களில் உறங்கக்கூடாது. தூக்கத்தின் நடுவே ஜலமல பாதை வரின் சோம்பல் பட்டுக்கொண்டு அவைகளை அடக்கிக்கொண்டு சும்மா யிருந்துவிடக் கூடாது. "காணி சோம்பல் கோடிகேடு" ஆ மன்றோ? எப்பொழுதும் இதன்பொருட்டு ஒரு பெரிய பாத்திரத்தில் நீர் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருத்தல் அவசியம். அன்றியும் ஒரு விளக்கும், கைத்தடியொன்றுங் கூட அருகில் வைத்த வண்ணமே துயிலல் வேண்டும். ஏதேனும் விஷ ஜந்துக்களின் உபத்திரவத்தை நீக்குதற்கோ, அன்றிக் கள்வர் பயம் ஒழித்தற்பொருட்டோ இவை பெரிதும் பயன்படும்.

கடைசியாக, வெளியிடங்களில் சயனிப்போர் முக்கியமாகக் கருத்தில் அமைக்கவேண்டுவன ; மர மடர்ந்த சோலைகளில் பாதபங்களின் அடியில் அனந்தல் புரிதல் கூடாது என்பதும், போர்வையின்றி எப்பொழுதும் உறங்கக்கூடாது என்பதுவுமே யாம்.

ஆகையால், சகோதர சகோதரிகள் யாவரும் இவற்றைச் செவ்வனே கடைப்பிடித்து ஒழுகி, ஆயுள், ஆரோகயம், செல்வம் முதலியன பெற்றுக் களிப்புடன் வாழ வேண்டுமாறு வேண்டுகின்றனம். முக்கியமாய்ப் பரீக்ஷை காலங்களில் தேயிலைப்பானம் அருந்தி இரவு வெகு நேரம் வரை விழித்துப் படித்தும் தேக அசௌக்கியத்தைத் தவிர யாதொரு பயனுங் கண்டிராத மாணவர் விடியற் காலையில் எழுந்து வாசிப்பதால் பெரும்பய னுறுவதன்னியில் சுக சரீரிக ளாகவும் இலங்குவர்.

"சிறு முயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்..." (குமரகுருபரர்)

முக்கியமாய், எவரும் நித்திரைக்குப் பங்கம் விளைக்குங் காரியங்களை அறவே விட்டொழித்தல்வேண்டும். உதாரணமாக, நாடகம் பார்க்கச் செல்லுவது, பயாஸ்கோப் காட்சியைக் கண்ணுறப்போவது ஆகிய இவை கூடாவாம். இவை துரப்பியாசமாவதன்றித் துயிலுக்கு மிகுதியும் கேடு விளைப்பனவாம். "இளமையிற் பழக்கம் இடுகாடு மட்டும்." ஆதலின் யாவரும் இப்பொழுது முதற்கொண்டே இந்நன் முறைகளைக் கடைப்பிடித்தொழுகி, நோயற்ற வாழ்வாங் குறைவற்ற செல்வத்தையும், "லக்ஷ்மி" கடாக்ஷத்தையும் பெற்று இன்புற வேண்டுமாய் நிர்மலனான சர்வேசன் கருணைமழை பொழியுமாறு அந்நிமலன் பாதாம்புயம் போற்றிப் பரவுகின்றனம். சுபமஸ்து.

'நன்மை கடைப்பிடி.'

'தீவினை யகற்று.'

தீ. ரா. ஸ்ரீ.

வைத்தியக் குறிப்புகள்

செங்கிரந்தி :—குழந்தை பிறந்தவுடன் தொண்டை கட்டிப் பூனைக் குரல்போல் அழும். நீரும் மலமுங் கட்டி வயி றாதும். கால் சிகப் பேறும். இதற்கு நல்ல கோரோஜனையைத் துவரை அளவு முலைப் பாலில் இழைத்துக் கொடுத்து வரத் தீரும்.

கருங் கிரந்தி :—குழந்தை அலறி யழும், குரல் கம்மும், முலை யுண்ணாது, மூர்ச்சை யாகும், உடல் வெதும்பும், கண் திறவாது, நா வரடசி காணும், கீழுதடு கை கால் கறுப்பேறும், வயிறாதி வலி காணும். இதற்குக் கருங் கழுதைலத்திச் சாறு, அவுரி இலைச்சாறு, சிற்றுமணக்கெண்ணெய் இவைகளைச் சமமாய்க் கலந்து, அதில் வசம்பையும் பூண்டையும கொஞ்சம் தட்டிப் போட்டுச் சிறு தீயாய் எரித்து நீர் சுண்டக் காய்ச்சி வேளைக்கு அரைச் சங்கு கொடுக்கத் தீரும்.

திரிகடுகு.

பித்தவாய்வு, அஜீரணம், எப்பம் முதலானவை :— சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றையும் சம அளவாய் எடுத்து வெய்யிலில் உலர்த்தி அல்லது இள வறுப்பாய் வறுத்துச் சூரணித்துத் துணியில் சலித்துச் சம சர்க்கரை சேர்த்துப் பிசைந்து வேளைக்கு மூன்று விரலால் எடுத்த அளவு சாப்பிடக் குணமாகும்.

ஈளை இருமல், சன்ன நோய், நாக்குத் திமிர், பாண்டு முதலியவை :—சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றையும் ஓர் நிறையாய் முன்போல் சூரணித்து, சூரணத்திற்கு இரட்டிப் பாகப் புதிய தேனைக்கொஞ்சம் ஜலம் சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயா யெரிக்க நுரையோடு பொங்கி வரும்போது நுரையை வழித்துப் போட்டு விட்டுப் பாகு பதத்தில் ஷ சூரணத்தைக் கொட்டிக்கிண்டி அந்தி, சந்தி இரு வேளையும் சுண்டைக்காய் வீதம் சாப்பிட்டு வரக் குண மாகும்.

ஜன்னி, சுரம், சீதளம் :—சுக்கு பலம் அரை, மிளகு பலம் அரை, திப்பிலி பலம் அரை, மூன்றையும் நன்ருய் இடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு இரண்டு ஆழாக்காகக் காய்ச்சி வடித்து வேளைக்கு அரை ஆழாக்காக சாப்பிடக் குணமாகும்.

பாம்புக் கடிக்குச் சிகிச்சை.

"ஹிந்து" பத்திரிகைக்குக் கொழும்பி லிருந்து எச். எச். மௌலான சையத் ஹுஸேன் சாயப் அவர்கள் எழுதுகிருர் :—

1. பாம்பு கடித்த வுடனே ஒரு பேனுக்கத்தி அல்லது ஒரு கூரிய குண்டூசியைக் கொண்டு கடிவாயை ரணம் போல் பெரிதாக்கி, ஒரு புகையிலைச் சுருட்டைச் சுட்டு அதன் சாம்பலை அந்த ரணத்தில் அப்புக. அரை மணி நேரத்தில் மஞ்சள் நிறமான விஷநீர் வெளிப் பட்டு விடும். கடிக்கப் பெற்றவன் விஷம் நீங்கிக் குணமடைவான்.

2. கொஞ்சம் புகையிலை கொணர்ந்து கஷாயமாகக் காய்ச்சி ஒன்று அல்லது இரண்டு கப் அளவு உள்ளே கொடுக்கவும். பிணியாளி எல்லா விஷத்தையும் அரை மணி நேரத்தில் வாந்தி யெடுத்துக் குணமடைவான்.

3. புகையிலையால் செய்த சாதாரண மூக்குத்தூளைக் கொஞ்சம் கொதிக்கவைத்த நீரில் போட்டுப் பின் உள்ளே கொடுக்க, பாம்புக் கடி விஷம் வாந்தி மூலமாக வெளியாகும். மேல் கண்ட முறைகள் மூன்றும் தனித்தனி யானவை. மேற்படி முறைகளால் யாதொரு கஷ்டமுமில்லாமல் அரைமணி நேரத்தில் பாம்புக் கடி குணமாகிறது.

தேள் கடிக்குச் சிகிச்சை.

மற்ருெரு நண்ப ரிடமிருந்து தெரிந்து கொண்ட சிகிச்சை :—

தேள் வலது புரத்தில் கொட்டினுல், வாயில் கொஞ்சம் புகையிலை போட்டு மென்று அந்த ரசத்தை இடது புறத்துக் காதில் விடவும்; இடது புறத்தில் கொட்டினுல் வலது புறக் காதில் மேற்படி ரசத்தை விடவும.

வைத்தியக் குறிப்புகள்

பிளேக் நோய் மருந்து.

விவசாய இலாக்காவைச் சேர்ந்த திருவாளர் கே. ஜகநாதராவ் மே 8-ந் தேதி "ஹிந்துப்" பத்திரிகையில் பிளேக் நோய்க்கு மருந்து ஒன்று எழுதியுள்ளார். அதைப் பல வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சி செய்யுமாறும் கோருகிறார். அது பின்வருமாறு.

மாவிலிங்க மரத்தின் பட்டையைச் சித்திரமூலத்தின் வேரோடு பொடி செய்துகொள்ளவும். நல்லெண்ணெயை நன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். எருக்கம் இலையை அந்த நல்லெண்ணெயில் தோய்த்துப் பிளேக் கட்டியின் மேல் போடவும். முன் பொடி செய்த பொடியைச் சுத்தமான துணியில் கட்டிச் சுடும் எண்ணெயில் நனைத்து ஒத்தடம் கொடுத்து வரவும். விடாது இவ்வாறு செய்தால் கட்டி கரைந்து குணமாகிறதாம்—"விவேகபாநு."

கொசு வராமல் தடுப்பதற்கு உபாயம்.

சோற்றுக் கத்தாழையைக் கட்டித் தொங்கவிட்டிருந்தால் கொசு வரமாட்டாதென ஒரு அனுபவசாலி கூறுகிறார்.

கால் நடையும் தேக சௌக்கியமும்.

கால்நடை எல்லாவித தேகப் பயிற்சிகளிலும் சிறந்தது. ஆரோக்கியத்தைத் தருவதற்கும் விசேஷித்தது. கொழுப்பினால் சரீரம் பருத்துப் போகாதிருக்கும்படி செய்வதையுந் தவிர அஜீரணத்தால் உண்டாகும் அநேக வியாதிகளையும் அகற்றுகின்றது. கால் நடைப் பயிற்சியால் மிதமிஞ்சிய சதை சீக்கிரத்தில் குறைவு படுகின்றது. ஆகையால் நோயற்ற வாழ்வை விரும்பும் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு மூன்று மைல் முதல் பத்து மைல் வரையில் நடந்து உலாவி வருவது அவசியம். அநேகர் நடப்பதற்குச் சோம்பியோ கௌரவக் குறைவென்றெண்ணியோ சமீபத்திற்குச் செல்லவேண்டிய பிரயாணங்களில் கூட அனாவசியமாக வண்டியிலேறிச் செல்லுகின்றார்கள். அவ்விதப் பழக்கம் கூடாதாகையால் அதை விட்டொழிப்பது நன்று.—மெடிக்கல் ரெவியூ, நியூயார்க்.

கைவிரலைக் கொடுத்தல்.

9-6-23-ல் பர்மாவில் பவுண்டை யென்ற ஊரில் பர்மா புங்கி (சந்நியாசி) ஒருவர் பர்மியர்களால் கட்டப்பட்டுள்ள கோயிலுக்குப் போய்த் தன்னுடைய சுண்டு விரலைக் கத்தியினல் அறுத்தும் அறுபடாததைக்கண்டு ஓர் கட்டையின்மேல் விரலைவைத்து வெட்டித் துண்டாக்கி அவ்விரலைத் துணியிற் சுற்றி மண்ணெண்ணெயில் நனைத்து சுவாமிக்கு முன் கொளுத்தி விட்டார். அக் கோயிலுக்குள் சென்றுகொண்டிருந்த பர்மியர்கள் இவரைப் பார்த்து, ஒரு கையிற் சுண்டுவிரல் இல்லாததையும் அதில் ரத்தம் வடிவதையுங் கண்டு நிகழ்ந்தவற்றைக் கேட்க, அப் புங்கி படுத்திருக்கும்பொழுது கனவில் புங்கி மாதிரி நான்கு விருத்தாப்பியர்கள் வந்து உனது சுண்டுவிரலை வெட்டித் துணியிற் சுற்றித் தீபம் ஏற்றிவை யென்று சொன்னதாகவும் அதற் கவர் எந்த இடத்தில் என்று கேட்டதற்கு உன் மனதிற் கிசைந்த இடத்தில் ஏற்றிவை என்று சொல்லி மறைந்து விட்டதாய்ச் சொல்லுகிறார். ஊர் ஜனங்கள் வெட்டுப்பட்ட கைக்குத் துணி சுத்தி மருந்து போட்டிருக்கிறார்கள். இதைக் கேள்வியுற்று நானும் எனது நண்பர்களும் சென்று பார்த்தோம். உண்மையாகவே இருந்தது. விரலை நறுக்கும்பொழுது வேதனை இல்லையா வென்று கேட்டோம். நறுக்கும்பொழுதும் பின்னும் வேதனை இல்லை என்று சொல்லுகிறார் என்று ஸ்ரீ. மு. ஆணிமுத்து எழுதுகிறார்.

தெய்வ தண்டனை.

ஜிரோஷாவில் ஒருவன் தனக்கு மரண பண்டில் பணம் கிடைப்பதற்காகத் தனது மனைவிக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டதாக வழக்கு ஏற்பட்டது. குற்றவாளி தனது சார்பாக நீண்டதோர் பிரசங்கம் செய்து "நான் குற்றவாளியா யிருந்தால் எல்லாம் வல்ல கடவுள் என்னைக் கொன்று விடட்டும்" என்று முடித்தான். உடனே அவன் மூர்ச்சையாய் விழுந்து மாண்டான். என்னை விடச் சிறந்த உயர்ந்த நீதிபதியிடம் குற்றவாளி போய்விட்டான் என்று நீதிபதி கூறினர்.

மனோன்மணீய வசனம்

ஸ்ரீமான் வையாபுரிப் பிள்ளை, B.A., B.L. எழுதியது.

அதிகாரம் IV : மனோன்மணீயின் கனவு.

183-ம் பக்கம் தொடர்ச்சி.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று அருளிச்செய்தனர் தாயுமானவர். பல வகைப்பட்டுக் காணுகின்ற உண்மைகளுள்ளே மேற்கூறிய வுண்மை என்றும் மாறுபாடில்லாததாயும் எல்லாருடைய அநுபவத்திலும் ஒரோ காலங்களில் தெளியக் கூடியதாயும் உள்ளது. இவ்வுலகத்திலே உள்ளும் புறமும் ஈஸ்வரன் சந்நிதி கொண்டிருந்து தனது அருளாலேயே சேதனுசேதனம் அனைத்தையும் ஆட்டுவிக்கின்முன். ஆனால் எல்லா விடங்களிலும் அவனது அருள் ஒரே அளவில் வெளிப்படுவதில்லை. சில தேசங்களிலே இயற்கை நலம் கனிந்து உயிர் வாழ்க்கையில் மதுரம் நிரம்பியிருக்கிறது ; வேறு சில தேசங்களில் அந்நலம் சிறிதும் பூவாதபடி உயிர் வாழ்க்கையே கொடியதோர் பாலையாகத் தோற்றுகிறது. இது போன்றே ஈஸ்வர கடாக்ஷமும் சிலரிடத்தில் மிகுதியாயும் சிலரிடத்தில் குறைவாகவும் விளங்குகிறது. ஒரு சிலரிடத்தில் ஈஸ்வர கடாக்ஷமே இல்லையென்று கூறும்படி அவ்வளவு குறைவாக அது காணப்படுகிறது. இன்னும் சிலரிடத்தில், அவர் இறைவனது அருட்சக்திகளாலேயே வளர்க்கப்பட்டவரென்று கூறும்படி அவ்வளவு அதிகமாகக் காணப்படுகிறது. நமது கதாநாயகி இவ்விரண்டாவது இனத்தைச் சார்ந்தவள். ஜீவக அரசன் தவஞ்செய்து பெற்றெடுத்த மகள். ஈஸ்வரப் பிரதிநிதியாகிய சுந்தரமுனிவர், தம் தண்ணிய அருள் நிழலில் வளர்ந்த இனிய பூங்கொடி. ஆகவே, இன்னதென்று வரையறுத்துக் கூறமுடியாத இயற்கை அருட் சக்திகளது லீலாவைபவத்தின் விநோதப் பதுமையாக விளங்கினுள் நமது மனோன்மணி.

நள்ளிரவின் நிச்சப்தத்தில் மன மொடுங்கி அயர்ந்து நித்திரை செய்து கனவு காணும் காலம் இவ்வியற்கைச் சக்திகள் வெளிப்பட்டுத் தோன்றி விளையாடுதற்குத் தகுந்த பொருத்தமும் சௌகரியமும் உள்ள தல்லவா ?

ஒரு நாளிரவில் மனோன்மணி ஒரு கனவு கண்டாள். பஞ்ச வர்ணக் கிளியொன்று குழலும் யாழும் பழித்த கிரம்பா மென்சொற்கள் மிழற்றி, இனிதாய் கானஞ்செய்து, ஒரு வேப்ப மரத்தின் மேலிருந்தது. அப்பொழுது ஆகாயத்திலே ஒருவானவன், விண்ணருள வந்ததொரு மெல்லமுதம் போல, திவ்வியமான இன்னிசையொன்றைப் பாடி மறைந்தான். இவ்இன்னிசையிலே பஞ்சவர்ணக் கிளி நெகிழ்ந்து உருகிப்போய் விட்டது. வானவன் தோன்றிய இடத்திலிருந்த பனையின்மீது அவ்வேழைக் கிளி பறந்து போயிருந்து, அவன் பாடிய இன்னிசையினையே தானும் பாட மீட்டு மீட்டும் முயன்றது. சிறிதும் பயன்படவில்லை. கடைசியாய் மிகவும் வாட்டமுற்றுத் தன் மௌனத்தில் துக்கத்தை யெல்லாம் அடக்கி உயிரைப் பலிகொடுத்தது போலிருந்தது.

முற்கூறிய இயற்கை அருட்சக்திகளின் விளையாட்டிலே தம்மையிழந்து நிற்கும் இயல்புடையார்க்கு 'உணர்ச்சி' யே எப்பொழுதும் முனைந்து மேலிட்டு நிற்கும். அன்றியும், இவர்கள் தமக்குப் புறம்பே யுள்ள இயற்கை லோகத்தில் அறிவு செலுத்தி வாழாது, தமக்கென வுரிய மானஸிக லோகத்திலே வாழ்ந்து வருவர். தாம் கருத்திற் கொண்டவற்றைச் சிலபோது சிறுகுழந்தைகளைப் போலப் பிறருக்கு உரைத்து விடுவர்; சிலபோது அவற்றைப் பிறர்க்குச் சிறிதும் உணர்த்தார். பிறர் கூறுஞ் சொற்கள் இன்னவர்களை எளிதில் மனந்தடுமாறச் செய்துவிடும். நமது மனோன்மணியிடத்தும் இக் குணங்கள் யாவும் இருந்தன.

தானே நட்டுவளர்த்த முல்லைச் செடி இன்று பூத்துவிட்டது! இதனை நினைக்குந்தோறும் மனோன்மணிக்குத் தன்னை யறியாமலே என்று மில்லாததோர் ஆநந்தம் ஊறிப்பெருக் கெடுத்தது. மீளவும் மீளவும் முல்லைச்செடி பூத்ததை எண்ணி யெண்ணி மகிழ்ச்சி கொள்வாள். தனக்கு மணம் அடுத்திருக்க வேண்டுமென்று செவிலி கூறியதும் இவள் மனத்தில் புதியதோர் உணர்ச்சி பிறந்துவிட்டது. கள் ளருந்தியவன் அதனை வெளிக்காட்டாது மறைப்பதைப்போல, இப்புத்துணர்ச்சியைத் தன்னுள்ளத்தே பொதிந்து வைத்தாள். ஆனால் மறைக்குந்தோறும் மறைக்குந்தோறும் அதுவும் வலிபெற்றுக்கொண்டே வந்தது. முற்றும் மறைந்து போய்விட்ட தென்றே கருதி மனோன்மணி தன்னை யேமாற்றிக் கொண்டாள்.

(இன்னும் வரும்.)

உலகப் போக்கு

பூமியின்கீழ்ப் புதிய உலகம்

பூமியினுள் பல ஆயிரக் கணக்கான அடிகளுக்குக்கீழே அழகான நந்தவனங்களும், ஆறுகளும், ஏரிகளும், வானவில்லுலகளும் கண்டு பிடிக்கப்பட்டன. அந்த உலகத்தில் இருள் சூழ்ந்திருக்கிறது. பூமியின் கீழ்ச் சென்ற 40 வருடங்களாக ஆராய்ச்சி செய்தவரும் பிரெஞ்சு தேசத்தின் ரசாயன சாஸ்திரியாகிய மிஸ்டர் ஹாடல் அதிக தீரமான காரியங்களைச் செய்து அந்தப் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார். அவர், கயிறுகள், மெழுகுவர்த்திகள், வர்த்திக் குச்சுகள், சுத்தி, கத்திகள், சீதோஷ்ண நிலை காட்டும் கருவி, தூரம் அளவு காட்டும் கருவி, நாசியில் விஷக்காற்று நுழையாமல் தடுக்கும் கருவி ஆகிய இந்தச் சாமான்களையும் அவருடைய ஆராய்ச்சிக்கு வேண்டிய மற்றச் சாமான்களையும் ஒரு சிறு சாக்கில் போட்டு அந்தச் சாக்கைத் தம் முதுகில் கட்டிக்கொண்டு, தம் தேசத்திலுள்ள ராபனல் என்னும் எரி மலையின் வாய் வழியாக ஒரு கயிற்றேணியில் கீழே இறங்கி அந்த உலகத்தைக் கண்டு பிடித்தார். பூமிக்குமேல் தம்முடைய நண்பர்களுடன் அடிக்கடி பேசிக்கொண்டிருப்பதற்காக அவர் தம் கழுத்தில் ஒரு டெலிபோனைக் கட்டிக் கொண்டிருந்தார். அந்த உலகம் இருளா யிருந்ததாம். இது பரியந்தம் அவரைத் தவிர வேறே யாரும் அந்த எரிவாய் வழியாகக் கீழே இறங்கிச் செல்ல முற்பட வில்லை.

***

16 வருஷம் தாமதித்த தபால்

1907-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ந்தேதியன்று இங்கிலாந்தில் ரெட்ஹில்ஸ் என்ற இடத்தில் போடப்பட்ட ஒரு கடிதம் மெயிட்ஸ்டோனிஸ் பங்கலந்த் ஹில்லிலுள்ள ஒரு கிழவியின் வீட்டில் 16 வருஷம் கழித்துத் தபால் இலாகா சேவகனால் கொடுக்கப் பட்டதாம். அந்தக் கவரை உடைத்துப் பார்க்கும்போது "என் அருமைத் தாயே?" என்று ஆரம்பித்து அவ்வீட்டுக் கிழவிக்கு அவள் குமாரன் எழுதின கடிதமாகக் காணப்பட்டதாம். ஆனால் அக்கடிதம் கிடைத்த ஒரு வருஷத்திற்கு முன்னரே அக்கிழவி இறந்துவிட்டாளாம்.

மணப்பெண்ணை மயிரைப்பிடித்து இழுத்துச் செல்லல்

எஸ்கிமோ ஜாதியார் மணம் செய்துகொள்ளும் வழக்கம் மிக்க விநோதமா யிருக்கின்றது. கலியாணம் ஆகாத எஸ்கிமோ சிறுவன் ஒருவன் விவாகமாகாத ஒரு பெண்ணை மணந்துகொள்ளப் பிரியப்பட்டானுல், உடனே அந்த மணப்பெண்ணின் வீட்டிற்குள் மணமகன் நுழைந்து அந்தப் பெண்ணின் தலைமயிரைப் பிடித்துப் பலவந்தமாகத் தன் வீட்டிற்கு இழுத்துக்கொண்டு செல்வானும். அதன் பிறகு இருவருக்கும் மணமும் நேசமும் ஏற்பட்டு விடுமாம்.

***

உலகத்திலுள்ள மோட்டார் வண்டிகளின் தொகை

உலகத்தில் மோட்டார் வண்டிகள் மொத்தத்தில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒரு கோடியே இருபது லட்சம் அமெரிக்காவைச் சேர்ந்தவை. சென்னை நகரில் மட்டும் சுமார் 7200 இது வரை இருக்கிறது.

***

குலைக்கும் மனிதன்

பாரிஸ் நகரில் தனது ஜீவனத்திற்காக நாய்போற் குரைக்கும் மனிதன் ஒருவன் இருக்கிறுன்! அங்கே நாய்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சொந்தக்காரர்கள் நாய்கள் தம்மிட மிருப்பதைச் சொல்லி அதற்குரிய வரியைச் செலுத்திவிடவேண்டும். ஆனுல் சிலர் திருட்டுத்தனமாக நாய்களை ஒளித்து வைத்துக்கொண்டு வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதுண்டு. ஆகையால் அதிகாரிகள் நாய் போலவே குலைக்கும் மனிதன் ஒருவனைத் தெரிந்தெடுத்திருக்கிறுர்கள். இவன் இரவில் வீடுகள் தோறுஞ் சென்று குரைப்பான். அங்கு நாய்களிருந்தால் பதிலுக்குக் குலைக்கும். இவ்விதமாக ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் நாய்களைக் கண்டு பிடித்துச் சொந்தக்காரர்களை வரிசெலுத்தும்படி செய்துவிடுகிறுர்கள்.

***

விதியின் விசித்திரம்

நியூயார்க்கில் வசிக்கும் ஜப்பானிய கம்பெனி உத்தியோகஸ்தரொருவர், ஜப்பான் பூகம்பத்திற் கப்பால் டோக்கியோவில் தமது

மனைவி மக்களுடைய க்ஷேமத்தை அறிய ஆவலுடன் முயன்று வந்தார் இரண்டு வாரங்கள் வரை ஒன்றும் தெரியவில்லை. கடைசியாக அவருக்கு ஒரு நண்பர் அவருடைய குடும்பம் நாசமாகி விட்டதாகத் தந்தி யடித்தார். துயர் பொறுக்கமாட்டாமல் ஒரு பெரிய கட்டிடத்தின் பதினைந்தாவது மாடியினின்று நடுத்தெருவில் கீழே குதித்து உடல் நசுங்கி உயிர் விட்டார். மறுநாள் 'தாமதப்பட்டது' என்று குறித்த ஒரு தந்தி ஆபீசுக்கு வந்தது. அதில், "முதலில் தெரிவித்த செய்தி தவறு. மனைவி தன் அன்பைத் தெரிவிக்கிறாள்" என்று கூறப்பட்டிருந்தது!

***

நீந்தும் மாது

உலகத்தில் நீந்தும் திறமையுடைய மாதர்களில் அதிக வேகமாக நீந்தக்கூடியவர் இந்தியானேபிலிஸி லிருக்கும் கெர்ட்ரூட் டெர்லி என்ற பெண்மணி என்றும் அவள் 13 நிமிஷம் 19 செகண்டில் 880 கஜ தூரம் நீந்தினாள் என்றும் மேல் நாட்டுப் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

***

அங்காரகனில் ஜீவ னுண்டாம்

டெனிரிப் என்னும் தீவில் 800ப அடி உயரமுள்ள மேட்டிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாய் அங்காரகன் என்னும் கிரகத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த ஸ்ரீமான் பி. எம். ரைவ்ஸ் என்னும் பிரிடிஷ் வானசாஸ்திரி அந்த கிரகத்தில் ஜீவன் இருக்கிறதென்ற முடிவுக்கு வந்து விட்டார்.

1887-ம் வருஷத்திலேயே ஷியபரல்லி என்னும் இத்தாலிய வான சாஸ்திரி அங்காரகனில் ஆயிரக் கணக்கான மைல் நீள முள்ள சில பெரிய கால்வாய்கள் ஓடுகின்றதைக் கண்டுபிடித்தார். அவருக்குப் பின் வந்த வானசாஸ்திரிகளும் அதை ஆராய்ச்சி செய்து வந்தனர். அதில் உயிருள்ள ஜீவன்களும் மனிதர்களும் இருக்க வேண்டு மென்பதே இப்பொழுது துணிபு.

அங்காரகனைப்பற்றி அதிகமாய் அறிந்துகொள்ள வெகு தூரத்திலுள்ளவைகளை ஸ்பஷ்டமாகக் காட்டும் தூரதிருஷ்டிக் கண்ணா

டிகளை ஏற்றவாறு கண்டுபிடிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளத்தந்தியில்லாக் கம்பியை உபயோகப்படுத்த வேண்டும். அல்லது சஹாராப் பாலைவனத்தைப் போலுள்ள இடங்களில் தீயைக் கொளுத்திச் சங்கேதம் செய்யவேண்டும்.

***

ஜெர்மன் அதிசயங்கள்

ஜெர்மானியர் ஒரு புது மாதிரியான மோட்டார் வண்டி கண்டு பிடித்திருக்கிறார்கள். அது தரையிலும் ஓடும், ஆகாயத்திலும் ஓடும். அதற்கு மூன்று சக்கரங்கள் தான் இருக்கின்றன. இதனுடன், ஜெர்மானியர்கள் பறந்து போகும் வெளிநாட்டு ஆகாயக் கப்பல்களை நிறுத்தித் தாம் விரும்பிய இடத்தில் அவைகளைக் கீழே விழும்படி செய்துவிடுகிறார்கள். இவ்விதமாக இதுவரை 45 பிரெஞ்சு ஆகாயக் கப்பல்களை ஜெர்மனிக்குள் வந்து விழும் படி செய்திருக்கிறார்கள். இன்ஜினுக்கு டிரைவர் இல்லாமல் ஓடக்கூடிய ரயில் வண்டியொன்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆள் இருந்து ஓட்டாத இந்த வண்டி எங்கெந்த ஸ்டேஷனில் நிற்க வேண்டுமோ அங்கு நின்று தானாகவே குறிப்பிட்ட நேரத்தில் புறப்படுகிறது.

***

உத்தியோக முறையில் இறந்தான்

ஜான் நிகல்சன் என்பவன் ஐரோப்பிய யுத்தத்திற் சேர்ந்து சண்டை புரிந்தான். அதிகாரிகளுக்கு எவ்விதமோ அவன் சண்டையிற் கொல்லப்பட்டு விட்டதாகச் செய்தி யெட்டி உத்தியோகமுறையிலும் அவன் இறந்து விட்டதாகப் பதிவு செய்துவிட்டார்கள். ஆனால் ஜான் நிகல்சன் உயிரோடேயே யிருந்து வெகு நாட்களுக்குப் பின் இங்கிலாந்துக்கு வந்து இராணுவ அதிகாரிகளிடம் உபகாரச் சம்பளம் (பென்ஷன்) கேட்டான். அவன் உத்தியோக முறையில் இறந்துவிட்டதால் அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கச் சட்டமில்லையென்று அதிகாரிகள் பதிலளித்து விட்டார்கள்!

***

பெரிய கட்டடங்கள்

நியூயார்க்கில் 80 மாடியுடன் ஒரு பெருங் கட்டடம் கட்ட ஏற்பாடு நடந்து வருகிறது. நியூயார்க்கில் ஈக்விட்டபில் கட்ட

டம் என்பதே மிக்க பெரியதாம். அதில், 12,37,000 சதுரஅடி வாடகைக்கு விடப்பட் டிருக்கிறதாம். உல்வொர்த் கட்டடம் இதைவிட உயர்ந்ததாம். அதில் 14 ஆயிரம் ஜனங்கள் வசிக்கின்றார்களாம். ஈக்விட்டபில் கட்டடத்தில் 12 ஆயிரம் பேரே வசிக்கிறார்களாம். ஈக்விட்டபில் கட்டடத்திற்குக்கீழே இருந்து மேலேபோய் வரும் எலெக்ட்ரிக் யந்திரக்கம்பி 63 இருக்கிறதாம். உல்வொர்த் கட்டடம் 792 அடி உயரமுடையதாம். 58 மெத்தைகள் அதில் இருக்கின்றனவாம். அதன் அஸ்திவாரம் பூமியின்கீழ் 110 அடி போயிருக்கிறதாம். இதில் மெத்தைக்கு ஏறி இறங்கும் விசை மின்சார எலிவேட்டரில் 7000 பவுண்டு சாமான்களும் ஒரு கோப்பைத் தண்ணீரும் வைத்து அதிவேகமாக மேலும் கீழும் போய் வரச்செய்து பரீட்சித்துப் பார்த்ததில், அந்தத் தண்ணீர் ஒரு பொட்டுக்கூடக் கீழே சிந்தவில்லை யாம்.

***

ஒரு மஹான்

தீபெத்திற்கு சமீபத்தில் போய்வந்த கூட்டத்தாரைச் சேர்ந்த மேஜர் கிராஸ் என்ற வெள்ளைக்காரர் பாஞ்சியம் என்ற இடத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது சில ஆச்சரியப்படத்தக்க விஷயங்களை வெளியிட்டார். அவர் இமயமலையில் 240 வயதுள்ள ஒரு வயோதிக குருவைக் கண்டார். பிரமஞான சங்கத்தை ஆதியில் ஸ்தாபித்த மாடம் பிளாவட்ஸ்கி என்ற மாது முன்னம் இந்தியாவிற்கு வந்திருந்தார். அம்மாதுக்கு இவர் குருவாயிருந்தவராம். அவருக்கு விசேஷ சக்திக ளுண்டாம். கணித சாஸ்திரத்தில் நிபுணராக விளங்குகிறாராம். தனது அவயவங்களைப் பெரிதாக்கிக் கொள்ளவும், சிறிதாக்கிக்கொள்ளவும் நினைத்த மாத்திரத்தில் திடீரென்று மறைந்துவிடவும், திடீரென்று தோன்றவும் அவரால் முடிகிறதாம். இமயமலையிலுள்ள மஹான்களை யெல்லாம் விட இவர் பெரியவராகக் காணப்படுகிறாராம். அவருக்குள்ள சக்தியினால் அவர் ஜீவிய காலத்தை அதிகப்படுத்திக் கொண்டு போகிறாராம். 1927-ம் வருஷத்தில் கொடுமையான பஞ்சத்துடன் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பமாகுமென்று அவர் சொல்லுகிறாராம். ஒரு குழந்தை மூலமாக அவர் அபாரச் செயல்களைச் செய்து காண்பித்ததுடன், ஒரு கண்ணாடியின் மீது சிறிது நேரம் தனது பார்வையை ஒருமித்துச் செலுத்தியதினால் அக்கண்ணாடி துண்டு துண்டாக உடைந்துபோயிற்றாம்.

விவேக பட்சிகள்.

சில பட்சிகளின் விவேகம் வியக்கத் தக்கதா யிருக்கிறது. முக்கிய மாய் (கூகைகள்) ஒரு வகைக் கான் கோழிகள் பூமி அதிர்ச்சி அபாயம் முதலிய சம்பவங்கள் நிகழ்வதைச் சில தினங்களுக்கு முன்னரே உணரும் சக்தி யுள்ளவை யென்று கடந்த மகா யுத்தத்தின் போது பேசிக் கொள்ளப்பட்டது. நார்போல்க் என்னுமிடத்தில் (ஸெப்லின்) ஜர்மன் ஆகாயக் கப்பல் வெடி குண்டுகளால் தாக்கியபோது குண்டு களின் உரத்த சத்தம் ஜனங்களின் செவிகளுக் கெட்டியதற்கு நெடு நேரத்திற்கு முன்னரே இந்தப் பட்சிகள் தம் கூடுகளில் தங்கியிருக்க முடியாமல் நாலு பக்கங்களிலும் பறந்துகொண்டு பெருத்த கூச்ச லிட்டன. 1915-ஆம் ஜனவரிமீ 24உ டோகர் பாங்கிக்குச் சமீ பத்தில் பிலச்சர் என்னும் ஜர்மன் போர்க் கப்பல் வெடித்து முழுகிய போதும் அந்த இடத்திற்கு ஐம்பது மயிலுக்கப் பாலிருந்த கூகை களுக்குத் தெரிந்து ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறதென்று அறிவிக்கு மாறு ஓயாது சத்த மிட்டனவாம். ஜப்பானிலும் நிலத்தில் யாதா மோர் அச்சம் தோன்றுவதாயிருந்தால், பின் வரும் அபாயத்தை இந்தப் பட்சிகள் முன்னரே உணர்த்தி விடுகின்றனவாம். அவ்வூரில் இந்தப் பட்சிகளைப் பூகம்பம் அறிவிக்கும் சிரேஷ்டிகளென்று சொல்லுகிறார்கள். சமீபத்தில் ஜப்பானில் நடந்த பூகம்ப விபத்து யாருக்குந் தெரியாத முன்னரே, இந்தப் பட்சிகள் பல இடங் களில் கூச்சலிட்டு அலைந்து கொண்டிருந்த தாகவும் அதன் காரணத்தைத் தெரியக் கருதி நிலங்களைப் பரீட்சிக்கும் கண்ணாடியில் பார்த்தபோது அதில் கொஞ்சமாக பூமி அதிர்ச்சியின் குறி தெரிந்த தாகவும் ப்ரோபஸர் ஒமாரி கூறுகிறார். இந்தப் பட்சிகள் ஆபத்து வருங் காலத்தைத் தெரிவிப்பதில் சிறந்தவைக ளானதால் பூகம்பம் அதிகமாய் நிகழும் நாடுகளில் வசிக்கும் ஜனங்களுக்கு இப்பட்சிகள் ஆவசிய மானதாகும். இந்தக் கூகைப் பட்சிகளைப்பற்றி வெள்ளையர் களுக்கு இப்போதுதான் தெரிகிறது போலும். இந்தியா ஜனங் களுக்குப் பல ஆயிர வருடங்களுக்கு முன்னிருந்தே தெரியு மென் பதைக் காட்ட ஆந்தைக்காதல், பஞ்சபட்சி, பல்லி சொல்லல் முத லிய சிறு புத்தகங்களும் இராமலிங்க சுவாமிகளும் மற்றும் பெரி யோர்களு மியற்றியுள்ள நூல்களு மிருக்கின்றன. தனி வீடு களிலும் யாதாமோர் மரணமோ அபாயமோ சம்பவிக்கப் போவதை உணர்த்தச் சில தினங்களுக்கு முன்னரே இந்தப் பட்சிகள் வாயிலில் வந்து ஒரு வித சத்த மிடுவதை நம் ஜனங்கள் நெடுநாள் அநுபவத் தில் கண்டிருக்கின்றனர். முற் காலத்திய நம் சாஸ்திரங்களெல்லாம் தற்போது சகல ஜாதியார் முன்னிலையிலும் பிரதி பலித்து வருவ தால் அவைகளில் ஒன்றையும் நாம் அநாவசியமென்று கருதாமல் கையாடி வருதல் நலமாகும்.—"விவேகபாநு."

திருநெல்வேலி பெரு வெள்ளம்

திருநெல்வேலி ஜில்லாவில் சில தினங்களுக்குமுன் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் அளவிறந்த கஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன. உயிர் நஷ்டம் அதிகம் இல்லை. பொருள் நஷ்டம் கோடிக்கணக்கில் மதிப்பிடப்படுகிறது. தாம்பிரபாணியின் இருகரையிலும் உள்ள ஊர்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமாய் விட்டன. பதினை யிரக்கணக்கானஜனங்கள் இருக்க இடமில்லாமலும் குடிக்கக் கஞ்சியில்லாமலும் தவிக்கிறார்கள். சுமார் இருபதினாயிரம் ஆடு மாடுகள் வெள்ளத்திற்கு இரையாயினவாம். வேறு நஷ்டங்களும் மிகுதி. வெள்ளத்தினால் சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களை அடைந்துள்ள சகோதரர்களுக்கு உதவி செய்ய விரும்பும் புண்ணியவான்கள் தங்களால் இயன்ற உதவியை நமக்கு அனுப்பினால் அதனைத் திருநெல்வேலி ஜில்லா வெள்ளக் கஷ்ட நிவர்த்தி நிதிக்குச் சேர்ப்பிக்கச் சித்தமாயிருக்கிறோம்.

லாப மடையுங்கள்!

எங்கள் சொந்த நெசவுச்சாலையில் கைதேர்ந்த நெசவுக்காரர்களால் எல்லா ஜாதிக்காரர்களுக்கு உபயோகமுள்ளதும், சலவைக்கும், தினசரி துவைத்துக் கட்டிக் கொள்ளுவதற்கும் கெட்டிச்சாயமாய் உள்ள சுண்ணாடிச் சேலைகள், பளுக்காச் சேலைகள், பட்டுச் சேலைகள், தாவணிகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய பலவித நூதன ஜவுளிகள் ஏராளமாய்த் தயாராகிறது. தேவையான தினசுகள் விபரமாய் இவ்வளவு ரூபாய்க்குள் என்று எழுதினால், அதின்படி வி. பி. மூலமாயும், பாங்க் மூலமாயும் அனுப்பலாகும். பிடித்தமில்லாத தினுசுகள் வாபஸ் எடுத்துக்கொள்ளப்படும்.

விலாசம்:—

M. R. C. பெருமாள்,

3-வது லக்ஷ்மிபுரம் தெரு, மதுரை.

லோகோபகாரி

முப்பது வருடங்களாக நிலவும்

வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

வருஷ சந்தா:—உள் நாடு ரூ. **4.** வெளி நாடு ரூ. **6.**

மாதிரிப்பிரதி இனாம்.

காரியஸ்தர், லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேஸ்வரன் பேட்டை :: :: சென்னை.

பி. வி. ராஜன் "பட்டணம் பொடி"

எக்ஸிபிஷன்களில் ஸர்ட்டிபிகேட்டும் அநேக பிரசித்தி பெற்ற டாக்டர்களால் ஸர்டிபிகேட்டும் பெற்றவை.

உயர்ந்த புகையிலையினால் குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் நீண்ட நாள் கெடாமலிருக்கும்படியும் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வெகு நாட்களாக மார்க்கட்டில் நல்ல பெயர் பெற்றுவருகிறது. வெளியூர்களுக்கு விலை சரசமாய் சப்ளை செய்து வருகிறோம். ஒரு தடவை எங்களிடம் தருவித்துப் பார்த்தால் அதன் உண்மை தெரிய வரும். வீசை 1-க்கு டின் உள்பட விலை ரூ. 3-10-0. தபால் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம். ஒரு சேர், அரை சேர் டின்களாகவும் அனுப்பப்படும்.

R. S. சுகந்த மூக்குத்தூள்.—இது நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதனால் ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லேற்படும் எல்லா வியாதிகளையும், மூளையைச் சேர்ந்த சகல வியாதிகளையும் போக்கி குணப்படுத்தும். புட்டி 1-க்கு விலை ரூ 0-4-0 ⎫ ஒரு சேர் டின்
டஜன் 1-க்கு ,, ரூ 2-4-0 ⎭ 1-க்கு ரூ 1-12-0

தபாற் செலவு அல்லது ரெயில் சார்ஜு பிரத்தியேகம்.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

COMMERCIAL PROGRESS IS HE KEY-NOTE OF

THE "INDIA TRADE DEVELOPER"

(India's only Magazine of Business Progress, Industry, etc.)

It tells its readers :—

How to do Business?
Where to do Business?
Where to market commodities?
How to Finance and build Business?

It is read by :—

The Manufacturers, the Traders, the Business people, Exporters, tho Importers—by all those who count in the Business World.

"INDIA TRADE DEVELOPER"

Deals with the current commercial problems, economic methods, Trade opportunities, Trade movements, New Industries, Trade enquiries, etc.

SUBSCRIPTION Re. 1-8-0. Post Paid.

Write for a FREE COPY.

For particulars apply to :—

Manager,
THE INDIA TRADE DEVELOPER OFFICE,
Akbar Sahib Street, Triplicane, MADRAS.

இது ஒரு அதிசயமல்லவா?

உண்மையில் இது ஒரு அதிசயம்தான். ஏனெனில் எல்லாக் கடியாரங்களுக்கு ஓடுவதற்கு சாவி கொடுத்தால், இதற்கு கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு பெரியகடியாரம் சுவற்றில் மாட்டும்பொழுது சரிமட்டம் பார்த்து வைக்கவேண்டியதாக இருக்கிறது, இதற்கு அது தேவையில்லை. எந்த சுவற்றில் மாட்டின போதிலும் மணி மிக ரம்மியமாக காட்டும். ஒரு நாளும் மணி அதிகமாகவும் கம்மியாகவும் போகமாட்டாது. ஆகையால் இது ஒரு அதிசயமாகும். புதியதாக ஜெர்மணி தேசத்தில் இருந்து வரவழைக்கப் பட்டு இருக்கிறது. இந்த கடியாரம் ஓடவேண்டும் என்று விருப்பம் இருந்தால் கடியாரத்தின் கீழ்பாகத்தில் இருக்கும் ஒரு குண்டுவை மேல் பாகத்திற்குத் தள்ள வேண்டும். மறுநாளும் இப்படியே செய்யவேண்டும். பார்வைக்கு மிக்க அழகாயிருக்கும். உடனே ஒன்றை வரவழைத்து பாருங்கள். கடியாரம் 1-க்கு விலை ரூ. 3 0 0.

வி. எ. எஸ். பாணி அண்டு கம்பெனி,

தபால்பெட்டி, நெ. 17, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ. அ. பை.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	15 0 0
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	2 4 0

இன்னும் இதர தமிழ் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,

புஸ்தக வியாபாரிகள்,

மைலாப்பூர், சென்னை.

PRINTING

VEST & Co.,

14, Mount Road, MADRAS.

வெஸ்ட் அண்டு கோ,

(ஸ்தாபித வருஷம் 1841)

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

வெஸ்ட் அண்டு கோ,

14, மவுண்ட் ரோட்,

சென்னை.

காப்பக நூலகம்

J10333

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர்ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.

குழந்தைகள் பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

குழந்தைகளின் மனதை ரமிக்க செய்வனவும் இந்தியர்களின் வீடுகளில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. குழந்தைகள் விளையாடும் சாமான் ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 வித சாமான்களடங்கி யிருக்கின்றன. அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பெற்று மிகுந்த அழகோடும் பளபளப்போடு மிருக்கும்.

கே. எஸ். முத்தையா அண்டு கோ.,

சில்க் அவுஸ், காசி.

இந்த விளையாட்டு சாமான்கள் இந்துக்களாலும், மகமதியாராலும், கிறிஸ்தவராலும், ஆங்கிலேயராலும் மதிக்கப்பட்டது.

நெ. 1 ஜோடிப்பு 1-க்கு விலை ரூ. 4-8.

நெ. 2 ஜோடிப்பு 1-க்கு விலை ரூ. 3-4.

Printed by M. A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.